(அ) மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பணிபுரியும் ஓட்டுநர், நடத்துநர்களுக்கு பொதுமக்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படும் நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு பணியில் அமர்த்துவதற்கு முன்பே பொதுமக்கள் தொடர்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படுகின்றனர். பின்னர் பணிபுரியும்போதும் பொது மக்களிடம் இருந்து வரும் புகார்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நடத்துநர்கள் மற்றும் ஓட்டுநருக்குப் பொதுமக்கள் தொடர்பு சம்பந்தமான நினைவூட்டு பயிற்சிகள் மீண்டும் அளிக்கப்படுகின்றன.

9—20 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியக் கூடிய ஓட்டுநர்கள் எல்லாம் பயணிகளை நீ, நான் என்றுதான் பேசுகிறார்கள். அது மட்டுமல்ல. பட்டிக்காட்டு பெண்மணிகள் பஸ்ஸில் ஏறினால் அவர்களுக்குப் பொறுமையாக பதில் சொல்லாமல் இடை வழியில் தயவு தாட்சண்யம் இன்றி இறக்கி விட்டு விடுகிறார்கள். இந்தக் குறையை அகற்றுவதற்கு அவர்களுக்கு மீண்டும் நல்ல ஆலோசனைகள் வழங்கி அவர்களைச் சீர்திருத்த முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல் நாம் அவர்களை வேலைக்கு தேர்ந்து எடுத்த உடனே நேரடியாக வேலைக்கு அனுப்புவது இல்லை. அவர்களுடைய பணி சம்பந்தமாகவும், பொது மக்கள் மத்தியில் எப்படி அவர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்ற அந்த பயிற்சியும் அவர்களுக்குத் தரப்பட்டுதான் போக்குவரத்துக் கழகங்களுக்கு வேலைக்காக அனுப்பப்படுகிறார்கள். இருந்தாலும் அப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி பலவிடங்களில் இருந்து அரசுக்கு புகார்கள் வருகின்றன. குறிப்பாக அப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்களை மீண்டும் திருத்துவதற்குத் தான் அவர்களுக்கு மறுபடியும் பயிற்சி அளிக்கப்படுகிறது

1980 ஏப்ரல் 19]

மறுபடியும்.தொடர்ந்து அந்தக் குற்றங்களை அவர்கள் செய்வார்களானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு வழி இல்லை.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில போக்குவரத்துப் பேருந்துகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பொது மக்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று பயிற்சி இப்போது அளிக்கப்பட்டு இருந்தாலும் — உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் டி.வி.எஸ். பேருந்துகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் எப்படி நடந்து கொண்டார்களோ, அவர்களே இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களாக இருப்பதால் பொது மக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ள வேண்டும். அதற்கான திட்டத்திற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் ஆங்காங்கு தேவைப்படுகின்ற நேரத்தில் நாம் வேலைக்காக டிரைவர்களையோ, கண்டக்டர்களையோ தேர்வு செய்கிறோம். இப்படிப்பட்ட தேர்வுகளை எல்லாம் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் தேர்ந்து எடுத்தாலும் இந்தப் பயிற்சி என்கின்ற அடிப்படையில் ஒருமுகப்படுத்த ஏற்கனவே நம்முடைய சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் பயிற்சிக் கொடுப்பதைப் போல 3 மாத காலம் அல்லது 6 மாத காலம் அவர்களுக்கு டிரைவிங் பயிற்சியோ அல்லது கண்டக்டர்களுக்கான பயிற்சியோ மறுபடியும் கொடுப்பதோடு. பொது மக்களிடத்திலே எப்படி மரியாதையோடு, பண்பாடோடு பழக வேண்டும் என்ற பயிற்சியும் கொடுக்கலாம் என்ற ஆலோசனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நாளைய தினம் அதுபற்றி இறுதியாக முடிவு அறிவிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரும்பாலும் செய்திகள் திருப்பித் திருப்பி இதையே சுற்றி வரும்.

திரு. செ. நார்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாகப் பேருந்துகளில் ஏராளமான பயணிகள் பயணம் செய்கின்றபோது பலதரப்பட்ட குணாம்சங்கள் கொண்ட பயணிகள் இதிலே பயணம் செய்கிறார்கள். எனவே, அவர்களோடு நடத்துனர்கள், ஓட்டுநர்கள் பணியாற்றுகின்றபோது, பல்வேறுவிதமான பிரச்சினைகள் வருகின்றன. அப்படிப் பிரச்சினைகள் வருகின்றபோது ஏதாவது அடி தடி ஏற்பட்டது என்றால் ஒரு குறிப்பிட்ட ரூட்டில் உள்ள பஸ்கள் எல்லாம் மூடக்கப்பட்டு மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை சுமுகமாக முடிக்கும் வகையில்

[1990 ஏப்ரல் 19

அப்படிப்பட்ட பகுதியில் மக்கள் பிரதிநிதிகளையும், அதேபோல் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளையும், நிர்வாகப் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு நல்லிணக்கக் குழுக்களை அமைத்து அதை சுமூகமாக முடிப்பதற்கு ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இதே மாதிரி பல சம்பவங்கள் தொடர்ந்து அடுக்கடுக்காக நடைபெற்றன. 1½ மாத காலத்திற்கு முன்னால், உடனே சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள், மாணவர்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசியதற்குப் பிறகு ஏதாவது ஒரு இடத்தில் பொது மக்களாலேயோ அல்லது மாணவர்களாலேயோ அல்லது தொழிலாளர்களாலேயோ பிரச்சினை ஏற்பட்டு, ஒரு குறிப்பிட்ட வழித் தடத்தில் ஓடக்கூடிய பேருந்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் அந்தப் பேருந்தை மட்டும் நிறுத்தி காவல்துறையிடத்திலோ அல்லது போக்குவரத்துக் கழக அதிகாரிகளிடத்திலோ அதுபற்றிப் பேசி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர அந்த ரூட்டில் ஓடக்கூடிய எல்லா பஸ்களையும் நடு ரோட்டில் நிறுத்திவிட்டு இறங்கச் சொல்வது என்பது வேண்டத்தகாத வேலை என்பதை சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து சில இடங்களில் அப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்வோம் என்று சொன்னவர்கள் மீதும் இந்தத் துறை நடவடிக்கையும் எடுத்துள்ளது. ஆகவே, மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் இதுபோன்ற இடையூறு ஏற்படாது இருக்கின்ற வகையில் மாண்புமிகு உறுபினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

9-25 மணி

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நடத்துனர்கள் டிக்கட்டுகளை கிழித்துக் கொடுக்கின்றபொழுது எச்சிலைத் தொட்டு தொட்டுத் தான் டிக்கெட்டுகளைக் கிழித்துக் கொடுக்கின்றார்கள். அதனை கைநீட்டி வாங்குகின்ற பயணிகளுக்கு சுகாதாரக் குறைவாகவும் ஒரு அருவருப்பு உணர்ச்சி தோன்றக் கூடியதாகவும் இருக்கிறது. இதனை தவிர்க்கின்ற வகையிலே நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலேயாவது ஈரப்பசையுடன் கூடிய கடற்பஞ்சை பேருந்துகளின் கூறையின் மேற்புறங்களில் நெடுக ஒட்டிவைக்கின்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பேருந்தில் பயணம் செய்யும்பொழுது இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பது தெரியாது. இருந்தாலும் இத்தகைய புகார்கள் வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

1990 ஏப்ரல் 19]

வனவிலங்குகள் சரணாலயம் அமைத்தல்

*868. திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் வனச்சரக பகுதியில் வன விலங்குகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் பகுதியில் இருக்கின்ற வனச்சரகத்திலேதான் அதிகப்படியான மான்கள், தமிழ் நாட்டிலேயே எங்கேயும் இல்லாத அளவிற்கு லேக்கப் என்ற ஒருவிதமான மான்கள் இருக்கின்றன. அடுத்தபடியாக, புள்ளி மான்கள், யானைகள், சிறுத்தைப் புலிகள் போன்றவை, ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான இனங்கள் அங்கே வாழ்கின்றன. அவை இன்றைக்குப் பாதுகாப்பற்ற நிலையில், சமூகவிரோதிகளுக்கு வனத்துறை அதிகாரிகளே உடந்தையாக இருந்து, அவற்றை உணவிற்காக சுட்டுக் கொன்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவை காப்பாற்றப்பட வேண்டுமானால் நிச்சயமாக அங்கே ஒரு சரணாலயம் அமைத்துத்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மான்கறி சாப்பிட்டு இருக்கிறீர்களா ? (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : இல்லை. இல்லை, ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த இடத்திலே சரணாலயம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதுடன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்த்தால்கூட நல்லது. நிச்சயமாக அவர் முன் வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அருகிலுள்ள சுழல்குட்டை என்ற பகுதியிலேயும், தலைமலை தெற்கு சரிவிலும் பொதுக் காடுகள் இருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் சொன்னது போல ஏறத்தாழ 400 வெள்ளி மான்களும், புள்ளிமான்களும் இருப்பதாக கணக்கு இருக்கிறது. யானைகளும் வருகின்றன. ஆனால், பிரச்சினை என்னவென்றால் இங்கே ஏறத்தாழ 10 ஆயிரம் கால்நடைகளும் மேய்ச்சலுக்காக வருகின்றன. அங்கே சரணாலயத்தை அமைத்துவிட்டால் அதற்குப்பிறகு மாடுகளை உள்ளே போவதற்கு அனுமதிக்க மாட்டார்கள். எனவே, சரணாலயம் வேண்டுமா அல்லது கால்நடைகள் அந்தப் பகுதியிலே மேய்ச்சலுக்காகச் செல்லவேண்டுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் ஆய்ந்து எனக்கு சொல்லட்டும். நான் நிச்சயமாக அங்கே வந்து பார்க்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டையும் பாதுகாக்க வேண்டியது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பொறுப்பு. விவசாயிகளுக்கு என்று, அதாவது கால்நடைகளுக்கு என்று தனியாக ஒரு இடத்தை, ஒதுக்கியும், சரணாலயத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட இடத்தையும் ஒதுக்கித் தந்து, இரண்டையும் பாதுகாக்க வேண்டும். அதுமட்டுமல்ல, பெரியார் மாவட்டத்தில் இன்றைக்கு பவானிசாகர் அணைக்குத்தான் திருவிழாக் காலங்களிலும், புத்தாண்டுகளிலும், தைத்திருநாளிலும் ஆயிரக்கணக்கான பேர் அங்கே, சுற்றுலாவிற்காக வருகிறார்கள். அதிலும் குறிப்பாக புதுத் தம்பதிகள் வேறு எங்கேயும் போவதில்லை. அங்கேதான் வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரைக்கும் எங்களுக்கு இப்படி ஒரு இடம் இருப்பது தெரியாமல் இருந்திருக்கிறதே. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, மாண்புமிகு தலைவர் அவர்கள் கூட அங்கே வரலாம், (சிரிப்பு) இப்போதுதான் அவர்களுடைய குடும்பத்திலே அவருடைய மகனுக்குத் திருமணம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய மணி விழாவின்போது கண்டிப்பாக வருகிறேன். (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : அவர்களைக் கூட நீங்கள் கார் வைத்து அனுப்பலாம். அவர்கள் வந்தாலும் இதுபற்றி பரிந்துரை செய்வார்கள். ஆகவே, நான் தெரிவித்துக் கொள்வது, அந்த பவானிசாகர் அணையிலே பார்க் இருக்கிறது, டேமும் இருக்கிறது. இன்னும் பலதரப்பட்ட மக்கள் அங்கே வந்து செல்கின்ற வாய்ப்பும் இருக்கின்ற காரணத்தால், சரணாலயம் அமைப்பதற்கும், அந்த பவானிசாகர் பகுதியை

1990 ஏப்ரல் 19]

ஒரு சுற்றுலா மையமாகவும் அமைத்துத் தருவதற்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேள்வி வனத்துறையிலே யிருந்து சுற்றுலாத்துறைக்கு வந்துவிட்டது. இருந்தாலும்கூட ஒரு பகுதியை தனியாக ஒதுக்கி சரணாலயம் அமைக்கலாம் என்ற யோசனை பரிசீலனைக்குரியது. ஆகவே, இதுபற்றி அதிகாரிகளிடம் மேலும் கலந்து பேசி அங்கே ஒரு சரணாலயம் அமைப்பதற்கும், அதைப் போல சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏதாவது செய்ய முடியுமென்றால் அதையும் செய்வதற்கும் அரசு முன் வரும்.

9.30 மணி

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாரி தலைமலை பவானிசாகர் பகுதியிலேயே அதிசயமான மான்கள் 'பில்லா' என்ற வகை இருக்கின்றன. அதேபோல காட்டு மிருகங்களும் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக கடந்த 15 நாட்களுக்கு முன்பு எனது பகுதியில், பீர்கடவு பகுதியில் ஒரு விவசாயி தன்னுடைய பட்டியிலே காவல் இருக்கும்போது, ஒரு புலி வந்து அங்கே ஆடுகளைக் குதறியது. அந்த விவசாயி தடியால் அடித்து புலியைக் கொன்றுவிட்டார். இதுமாதிரி பல சம்பவங்கள் அங்கே நடக்கின்றன. அதற்காக அந்தப் பகுதியை ஒரு சுற்றுலா தலமாகவும், அதேபோல விவசாயிகளின் குறைகள் தீர.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுற்றுலாத் தலமாக அமைத்தால் புலிகளை அடிக்காமல் விட்டுவிடுவீர்களா ?

திரு. தூ. க. சுப்பிரமணியம் : அங்கே சரணாலயம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பவானிசாகர் பகுதியை ஒட்டியதாக இருக்கிறது என்று கருதுகிறேன். அப்படியானால் ஏற்கனவே சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் எங்கெங்கே வனவிலங்கு சரணாலயங்கள் இருக்கின்றன ? அரசு புதிதாக எங்கெங்கு வனவிலங்கு சரணாலயங்கள் அமைக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வனவிலங்கு சரணாலயங்கள் 12 இடங்களில் இருக்கின்றன. முண்டந்துறை, களக்காடு, அதேபோல ஆனைமலை சரணாலயம், முதுமலை சரணாலயம் என்று இருக்கின்றன. இவைகளைப் பற்றிய தகவல் உங்களுக்கு வேண்டுமானால், என்னிடம் தனியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்,

திரு. எஸ். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே முதுமலை சரணாலயம் என்பது பிரசித்தி பெற்றது. அன்னியச் செலாவணியை ஈர்க்கும் வகையில் அங்கே வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு 'Tree Top Houses' என்று சொல்லப்படுகிற மர உச்சி வீடுகளை கட்டி, வனவிலங்குகளைப் பார்க்கும்படி வசதி செய்துதர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, முதுமலை சரணாலயத்தின் உள்பகுதியிலே சுற்றுலாத்துறைக்கு என்று விடுதிகள் இருக்கின்றன. என்றாலும் அந்த முதுமலை சரணாலயத்தின் மத்தியப் பகுதியிலேதான் ஊட்டியிலேயிருந்து மைசூர் செல்லக்கூடிய சாலை இருக்கிறது. இருந்தாலும் அந்த சாலை அமைந்ததற்குப் பிறகு சரணாலயத்திற்கு 'டிஸ்டர்பன்ஸ்' இருக்கிறது என்று வல்லுனர்கள் கூறினார்கள். ஆகவேதான் அங்கே சுற்றுலாத் துறையின் சார்பில் விடுதி அமைக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, நான் 10 நாட்களுக்கு முன்பு அங்கே சென்று பார்த்தேன். விடுதிகள் அங்கே நிச்சயமாக அமைக்கப்படும். அது மர உச்சியிலே இல்லாவிட்டாலும் மூங்கில் போன்ற மரங்களால் வீடுகளை அமைத்துத் தர திட்டம் இருக்கிறது.

தேர் புதுப்பித்தல்.

* 5120. திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை ஆலய பெரிய தேர் புதுப்பிக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை ஆலய பெரிய தேருக்கு சக்கரம் ஒன்று புதியதாக செய்து புதுப்பிக்கப்பட்டு, கார்த்திகை தீப தேர் விழா நடைபெற்றுள்ளது.

மாண்புமிகு திரு.கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வனவிலங்கு சரணாலயங்கள் 12 இடங்களில் இருக்கின்றன. முண்டந்துறை, களக்காடு, அதேபோல ஆனைமலை சரணாலயம், முதுமலை சரணாலயம் என்று இருக்கின்றன. இவைகளைப் பற்றிய தகவல் உங்களுக்கு வேண்டுமானால், என்னிடம் தனியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்,

திரு. எஸ். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே முதுமலை சரணாலயம் என்பது பிரசித்தி பெற்றது. அன்னியச் செலாவணியை ஈர்க்கும் வகையில் அங்கே வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு 'Tree Top Houses' என்று சொல்லப்படுகிற மர உச்சி வீடுகளை கட்டி, வனவிலங்குகளைப் பார்க்கும்படி வசதி செய்துதர இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, முதுமலை சரணாலயத்தின் உள்பகுதியிலே சுற்றுலாத்துறைக்கு என்று விடுதிகள் இருக்கின்றன. என்றாலும் அந்த முதுமலை சரணாலயத்தின் மத்தியப் பகுதியிலேதான் ஊட்டியிலேயிருந்து மைசூர் செல்லக்கூடிய சாலை இருக்கிறது. இருந்தாலும் அந்த சாலை அமைந்ததற்குப் பிறகு சரணாலயத்திற்கு 'டிஸ்டர்பன்ஸ்' இருக்கிறது என்று வல்லுனர்கள் கூறினார்கள். ஆகவேதான் அங்கே சுற்றுலாத் துறையின் சார்பில் விடுதி அமைக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, நான் 10 நாட்களுக்கு முன்பு அங்கே சென்று பார்த்தேன். விடுதிகள் அங்கே நிச்சயமாக அமைக்கப்படும். அது மர உச்சியிலே இல்லாவிட்டாலும் மூங்கில் போன்ற மரங்களால் வீடுகளை அமைத்துத் தர திட்டம் இருக்கிறது.

தேர் புதுப்பித்தல்.

* 5120. திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை ஆலய பெரிய தேர் புதுப்பிக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை ஆலய பெரிய தேருக்கு சக்கரம் ஒன்று புதியதாக செய்து புதுப்பிக்கப்பட்டு, கார்த்திகை தீப தேர் விழா நடைபெற்றுள்ளது.

1990 ஏப்ரல் 19]

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் உள்ள பெரிய தேரின் இணைப்பில் உள்ள பழங்காலச் சிற்பங்கள் கடந்த காலங்களில் சிலரால் களவாடப்பட்டுவிட்ட காரணத்தால், இணைப்பிலிருந்து அந்த சிற்பங்கள் அறுக்கப்பட்ட இடங்களில் சாதாரண இரும்புக் குழாய்களை இப்போது பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் தேர் திருவிழா நடக்கிற காலத்தில், தேர் ஓடுகின்றபோது, அது பொதுமக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் காரணத்தால், அந்தத் தேரை வலுவூட்டும் வகையில் மீண்டும் அந்த இணைப்புகளில் சிற்பங்களைச் செய்து பொருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, அருமையான யோசனை. சிற்பச் சிலைகள் அங்கே செய்து பொருத்துவதற்கு அறநிலையத் துறை ஏற்பாடு செய்யும்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேருடைய பழங்காலச் சக்கரங்கள் அடிக்கடி பழுதுபடுகின்ற காரணத்தால், திருவாரூர் தேர் போல, சக்கரங்கள் நவீனமயப்படுத்தப்பட்டு, பிரேக் சிஸ்டத்துடன் அமைத்துத் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு திரு.கே . பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் மீண்டும் திருவண்ணாமலைக்கு வருகிறபோது தேரை நேரில் பார்த்து அதுபற்றி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து தேர் இழுத்துப் பழக்கப்பட்ட திரு. திருவேங்கடம் அவர்கள் (சிரிப்பு)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைத் தேரிலே இருந்த பண்டைய காலச் சிற்பங்கள் ஏற்கெனவே இருந்த ஆட்சிக் காலத்தில் திருடப்பட்டுவிட்டன. அதற்கு உடந்தையாக அங்கே இருந்த அறங்காவலர்களே உறுதுணையாக இருந்தார்கள் என்று இந்த அவையிலேயே அப்போது கூறப்பட்டு இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர்..... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தின்போது குற்றச்சாட்டு எதுவும் எழக்கூடாது. (குறுக்கீடு) நீங்கள் குற்றச்சாட்டுச் சொன்னதால்தான் அது தவிர்க்கப்பட வேண்டியதாயிற்று.

திரு. எம். முத்தையன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை பெரிய தேரில் உள்ள அந்தச் சிற்பங்கள் காணாமல் போன பிறகு மறுபடியும் கலைச் சிற்பங்களைப் புதுப்பித்து அதில் சேர்க்கும் எண்ணம் அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய திரு. சங்கராபுரம் முத்தையன் அவர்கள் ராமலிங்கனார் அவர்களைப் பற்றி மிகவும் தெரிந்தவர்கள். அவர்களே அந்த வகையில் பாட்டுக்களை எல்லாம் பாடி இருக்கிறார்கள். சிற்பங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு வரைபடம் கொடுத்தால் நிச்சயமாக அந்த வகையில் அந்தச் சிற்பங்களை அமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலா மையம் ஆக்குதல்.

* 1787. **திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் சத்தி வட்டம் தலைமலை வனச் சரணாலயத்தை சுற்றுலா மையம் ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், சத்தி வட்டம், தலைமலை வனச் சரணாலயம் என்று ஏதும் இல்லை. தலைமலை வனச் சரகத்தை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டமும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்புகள் இல்லை என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களால் துவக்கப்பட்ட திராவிட இயக்கத்தில் வந்த நீங்கள் இன்றைக்கு ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இதைக் கருத்தில் கொண்டு பெரியார் மாவட்டத்தில் தலைமலைப் பகுதி இயற்கை வளம் நிறைந்த சிறந்த பகுதியாக இருப்பதால் முதுமலை, மைசூர் செல்கின்ற சுற்றுலா பயணிகள் அங்கே தங்கி அங்குள்ள பல்வேறு வன விலங்குகளைப் பார்க்கின்ற அளவுக்கு அதை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களை மாவட்ட சுற்றுலாத் தலங்களாக அறிவித்திருக்கிறோம்.

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய திரு. சங்கராபுரம் முத்தையன் அவர்கள் ராமலிங்கனார் அவர்களைப் பற்றி மிகவும் தெரிந்தவர்கள். அவர்களே அந்த வகையில் பாட்டுக்களை எல்லாம் பாடி இருக்கிறார்கள். சிற்பங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு வரைபடம் கொடுத்தால் நிச்சயமாக அந்த வகையில் அந்தச் சிற்பங்களை அமைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுலா மையம் ஆக்குதல்.

* 1787. **திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம் சத்தி வட்டம் தலைமலை வனச் சரணாலயத்தை சுற்றுலா மையம் ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியார் மாவட்டம், சத்தி வட்டம், தலைமலை வனச் சரணாலயம் என்று ஏதும் இல்லை. தலைமலை வனச் சரகத்தை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டமும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்புகள் இல்லை என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களால் துவக்கப்பட்ட திராவிட இயக்கத்தில் வந்த நீங்கள் இன்றைக்கு ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இதைக் கருத்தில் கொண்டு பெரியார் மாவட்டத்தில் தலைமலைப் பகுதி இயற்கை வளம் நிறைந்த சிறந்த பகுதியாக இருப்பதால் முதுமலை, மைசூர் செல்கின்ற சுற்றுலா பயணிகள் அங்கே தங்கி அங்குள்ள பல்வேறு வன விலங்குகளைப் பார்க்கின்ற அளவுக்கு அதை சுற்றுலா மையமாக ஆக்கும் செயற்குறிப்பு குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு முழுவதும் 41 இடங்களை மாவட்ட சுற்றுலாத் தலங்களாக அறிவித்திருக்கிறோம்.

1990 ஏப்ரல் 19]

அதிலே பெரியார் மாவட்டத்திலும் இரண்டு இடங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு இடங்கள்தான் என்பதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நடேசன் அவர்கள் இருக்கிறார்கள். திற்பரப்பு, பேச்சிப்பாறையில் இருந்தாலும் கூட, தொட்டிபாலத்தையும் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல், இரண்டுக்கும் மேலாக, முக்கியமான இடம் என்று நாம் கருதினால் அந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்து பரிந்துரை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடங்கள் பெரியார் மாவட்டத்தில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த இடங்கள் ? அதோடு சேர்த்து 3-வது இடமாக தலைமலைப் பகுதியையும் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை என்ற இடத்தை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இரண்டாவது இடம் பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் சேர்த்து நாம் ஆய்வு செய்யலாம்.

சுற்றுலா மையமாக்குதல்

*8053. **திரு. எஸ். ஏ. தங்கராஜன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், சிறுமலை, மலைக்கோட்டை, காமராஜ் நீர்த்தேக்கம், பேரணை போன்ற இடங்களை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 ஏப்ரல் 19]

அதிலே பெரியார் மாவட்டத்திலும் இரண்டு இடங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு இடங்கள்தான் என்பதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நடேசன் அவர்கள் இருக்கிறார்கள். திற்பரப்பு, பேச்சிப்பாறையில் இருந்தாலும் கூட, தொட்டிபாலத்தையும் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல், இரண்டுக்கும் மேலாக, முக்கியமான இடம் என்று நாம் கருதினால் அந்த இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்து பரிந்துரை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடங்கள் பெரியார் மாவட்டத்தில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த இடங்கள் ? அதோடு சேர்த்து 3-வது இடமாக தலைமலைப் பகுதியையும் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை என்ற இடத்தை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இரண்டாவது இடம் பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் சேர்த்து நாம் ஆய்வு செய்யலாம்.

சுற்றுலா மையமாக்குதல்

*8053. **திரு. எஸ். ஏ. தங்கராஜன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டம், சிறுமலை, மலைக்கோட்டை, காமராஜ் நீர்த்தேக்கம், பேரணை போன்ற இடங்களை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1990 ஏப்ரல் 19

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டத்தில் சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஏராளமான இடங்கள் இருப்பதை இங்கே சுட்டிக்காட்டியுள்ளேன். குறிப்பாக சிறுமலைப் பகுதி, பேரணை நீர்த்தேக்கப் பகுதி, திண்டுக்கல் மலைக் கோட்டைப்பகுதி, காமராஜர் நீர்த்தேக்கப்பகுதி ஆகிய இடங்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்றுவருவது பழக்கத்தில் இருக்கின்றது. எனவே, இவைகளை எல்லாம் அரசு ஆய்வு செய்து ஒரிரு இடங்களையாவது சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு இடங்களை மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவித்திருக்கிறோம். இதற்கு மேலும் மாவட்ட சுற்றுலாத் தலம் வேண்டுமென்றால் அதையும் நாம் பரிசீலிக்கலாம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டுள்ள இந்தப் பேரணை மிக அழகான, அற்புதமான அணை. ஆனால் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள பூங்கா பராமரிப்பு ஏதும் இல்லாமல் பாழடைந்து இருக்கிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள இரண்டு சுற்றுலா மையங்களை ஒட்டி, இதையும் சுற்றுலா மையமாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சுற்றுலா மையமாக ஆக்கப்படுவதற்கு என்னென்ன அடிப்படை தகுதிகள் தேவை ? இயற்கை வளம் கொஞ்சுகின்ற மேகமலை போன்ற பகுதிகளை சுற்றுலா மையமாக ஆக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டம் தனியாகப் பிரிந்த பிறகு, கொடைக்கானல் என்கின்ற கோடை வாசஸ்தலம் திண்டுக்கல் மாவட்டத்திற்கு சென்றுவிட்ட பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவருடைய மதுரை மாவட்டத்திற்கும் அப்படிப்பட்ட ஒரு சுற்றுலா மையம் இல்லையே என்கிற ஆதங்கத்தில் இருக்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

1990 ஏப்ரல் 19]

(கிரிப்பு) ஆகவே, மதுரை மாவட்டத்தில் இருக்கிற மேகமலையை கொடைக்கானல் போன்ற இடமாக ஆக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். சுற்றுலாத் துறை நிச்சயமாக அதைப் பரிசீலித்து அதற்கான காரியங்களில் ஈடுபடும்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் தமிழ்நாட்டில் சுற்றுலா மையங்கள் எந்தெந்த இடங்களில் அமைய இருக்கின்றன ? குறிப்பாக என் தொகுதியிலுள்ள சாத்தனூர் அணைக்கட்டுக்கு தினசரி பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து பார்வையிட்டு பொழுது போக்குகின்ற இடமாக அது இருப்பதால் அந்த இடத்தை சுற்றுலா மையமாக ஆரம்பிக்கிற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்புவராயர் மாவட்டம் தனியாக பிரிக்கப் பட்ட பிறகு, அந்த மாவட்டத்திற்கு இரண்டு மாவட்ட சுற்றுலா ஸ்தலங்களை ஏற்படுத்தி அறிவித்திருக்கிறார்கள். அதில் ஒன்று சாத்தனூர் அணை, இரண்டு ஜவ்வாது மலை. சாத்தனூர் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கான வசதி களை மாவட்ட சுற்றுலாத் துறை செய்ய முன்வரும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணையில் இரண்டு நதிகள் ஒன்றாகக் கலக்கின்றன. அங்கு அழகான பாலம் ஒன்று இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில், 100 ஆண்டுகளுக்கு முன்பு அது கட்டப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் அங்குள்ள அனுமார் கோயிலுக்கு ஆடி மாதத்தில் வருவார்கள். பக்தர்கள் எல்லா இடங்களிலிருந்தும், வட இந்தியாவிலிருந்தும் அங்கு வந்து குழுமுவார்கள். அதற்கு முன்னுரிமை கொடுத்து சுற்றுலா மைய மாக அறிவிக்கப்படுமா? அத்துடன் மௌனா கடற்கரையில் உள்ளதுபோல வண்ண வண்ண மீன்களை அங்கே வளர்க்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தைப் பற்றி கேட்கிறார்கள் ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள என் தொகுதியிலுள்ள பேரணையைப் பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு என்னென்ன இருக்கின்றன என்ப தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் விளக்கமாகச் சொன் னதை நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆகவே,

அங்கே நான் வருகிறபோது, அந்த இடங்களைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்வோம்.

தன்னிறைவுத் திட்டம்.

*1571. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னிறைவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

நகர பஞ்சாயத்துக்களைச் சேர்த்தல்.

* 2246. திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்களில் நகர பஞ்சாயத்துக்களும் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990–91 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முழு அளவில் அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப் படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரில் அமல்படுத்தப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. மற்றுமுள்ள ஜவகர் வேலைவாய்ப்பு திட்டங்களோடு உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தையும் அரசு அமுல்படுத்துமா ?

அங்கே நான் வருகிறபோது, அந்த இடங்களைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்வோம்.

தன்னிறைவுத் திட்டம்.

*1571. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னிறைவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

நகர பஞ்சாயத்துக்களைச் சேர்த்தல்.

* 2246. திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்களில் நகர பஞ்சாயத்துக்களும் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990–91 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முழு அளவில் அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப் படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரில் அமல்படுத்தப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. மற்றுமுள்ள ஜவகர் வேலைவாய்ப்பு திட்டங்களோடு உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தையும் அரசு அமுல்படுத்துமா ?

அங்கே நான் வருகிறபோது, அந்த இடங்களைப் பார்வையிட்டு, அதற்குப் பிறகு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்வோம்.

தன்னிறைவுத் திட்டம்.

*1571. திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியங்களுக்கான தன்னிறைவுத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

நகர பஞ்சாயத்துக்களைச் சேர்த்தல்.

* 2246. திரு. எஸ். டேனியல்ராஜ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., போன்ற திட்டங்களில் நகர பஞ்சாயத்துக்களும் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990–91 முதல் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் முழு அளவில் அனைத்து பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப் படும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நில மற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு ஆண்டு முதல் ஒருங்கிணைக்கப்பட்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் என்ற பெயரில் அமல்படுத்தப்படும்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி. மற்றுமுள்ள ஜவகர் வேலைவாய்ப்பு திட்டங்களோடு உணவுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தையும் அரசு அமுல்படுத்துமா ?

1990 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் இணைக்கப்பட்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்பது அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

9-45 மணி

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களை தேர்ந்தெடுக்க டாஸ்க் போர்ஸ் கமிட்டி என்று ஏற்படுத்தப்பட்டு, அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் இணைக்கப்பட்டார்கள். அந்தக் கமிட்டிகள் செயல்படவில்லை என்பதால் அதிகாரிகளே தேர்வு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இது தொடர்புடைய கேள்வியல்ல.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களைப் போலவே, நகரியங்களும் இது போன்ற திட்டங்களிலே இப்போது சேர்க்கப்படுவதில்லை. நகரியப் பகுதிகளில் பின்னடைந்த கிராமங்கள் இருப்பதால், அவற்றுக்கும் இந்தத் திட்டங்கள் நீட்டிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் ஊராட்சி மன்ற எல்லைக்கு மட்டும்தான் கிராமங்கள் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டு, இந்தத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வந்தது. பேரூராட்சி என்ற பெயரில் உள்ளவையும் பெரிய கிராமம், பெரிய ஊராட்சி தான். ஆகையால் இந்தத் திட்டங்கள் அங்கேயும் அமுல்படுத்தப்படலாம் என்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டு, அந்தத் திட்டம் தற்போது பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. நகரீயம் என்று நாமே சொல்ல ஆரம்பித்த பிறகு, அதைப் பற்றி பிறகுதான் யோசிக்க வேண்டும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எந்தெந்தத் திட்டங்களை இந்த ஆண்டு செயல்படுத்துவதற்கு அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை கிராமங்களில் எந்தெந்தத் திட்டங்கள், எந்தெந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறதோ அவைகள் அனைத்தும் பேரூராட்சிகளிலும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளில் கூட, கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்றுதான் பல உட்கிராமங்கள் பேரூராட்சிகளுக்கு உட்பட்டு இருக்கின்றன. எந்தத் திட்டம் வந்தாலும் பேரூராட்சி என்ற அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. கிராமங்களையும், பேரூராட்சிகளையும் தகுதி அடிப்படையில் பார்த்தால் ஒரே நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களை பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தும் வகையில் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கேள்வியே அதுதான். எனவே இந்த ஆண்டு விஸ்தரிக்க இருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறேன். அனைத்துத் திட்டங்களும் எல்லாப் பேரூராட்சிகளுக்கும் அமல்படுத்தப்படும்.

ரேஷன் கடைகளில் விநியோகப் பதிவேட்டைச் சரிபார்த்தல்

* 5778. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடிமைப் பொருள் வழங்கும் கடைகளில் நடைபெறும் ஒழுங்கீனத்தை தடுக்க அரசு ரேஷன் கடைகளில் உள்ள விநியோக பதிவேட்டுடன் மக்களின் ரேஷன் கார்டுகளை சரிபார்க்கும் நடைமுறையை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

நியாயவிலைக் கடைகள் தீவிர தணிக்கை செய்யப்படும் போது அக்கடைகளில் பராமரிக்கப்படும் விநியோகப் பதிவேட்டுடன் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்படும் பதிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது ஆகும்.

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, நகரங்களில் பால் வழங்கும்போது அட்டையை பஞ்ச் செய்வதுபோல குடிமைப் பொருள் வழங்கும்போதும் அந்த அட்டையை பஞ்ச் செய்து கொடுக்கும் முறை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்ச் செய்கின்ற முறை இப்போது பின்பற்றப்படவில்லை. மாறாக அதில் அடையாளம் வைக்கும் முறைதான் இப்போது பின்பற்றப்படுகிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரூராட்சிகளில் கூட, கிராமப் பஞ்சாயத்துக்கள் போன்றுதான் பல உட்கிராமங்கள் பேரூராட்சிகளுக்கு உட்பட்டு இருக்கின்றன. எந்தத் திட்டம் வந்தாலும் பேரூராட்சி என்ற அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. கிராமங்களையும், பேரூராட்சிகளையும் தகுதி அடிப்படையில் பார்த்தால் ஒரே நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களை பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தும் வகையில் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கேள்வியே அதுதான். எனவே இந்த ஆண்டு விஸ்தரிக்க இருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறேன். அனைத்துத் திட்டங்களும் எல்லாப் பேரூராட்சிகளுக்கும் அமல்படுத்தப்படும்.

ரேஷன் கடைகளில் விநியோகப் பதிவேட்டைச் சரிபார்த்தல்

* 5778. திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடிமைப் பொருள் வழங்கும் கடைகளில் நடைபெறும் ஒழுங்கீனத்தை தடுக்க அரசு ரேஷன் கடைகளில் உள்ள விநியோக பதிவேட்டுடன் மக்களின் ரேஷன் கார்டுகளை சரிபார்க்கும் நடைமுறையை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

நியாயவிலைக் கடைகள் தீவிர தணிக்கை செய்யப்படும் போது அக்கடைகளில் பராமரிக்கப்படும் விநியோகப் பதிவேட்டுடன் குடும்ப அட்டையில் பதிவு செய்யப்படும் பதிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இது ஏற்கனவே நடைமுறையில் உள்ளது ஆகும்.

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, நகரங்களில் பால் வழங்கும்போது அட்டையை பஞ்ச் செய்வதுபோல குடிமைப் பொருள் வழங்கும்போதும் அந்த அட்டையை பஞ்ச் செய்து கொடுக்கும் முறை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பஞ்ச் செய்கின்ற முறை இப்போது பின்பற்றப்படவில்லை. மாறாக அதில் அடையாளம் வைக்கும் முறைதான் இப்போது பின்பற்றப்படுகிறது.

1990 ஏப்ரல் 19]

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, இப்போது பறக்கும் படை என்ற ஒன்று கூட்டுறவுச் சங்கங்களிலே திடீரென்று புகுந்து, ஒழுங்காக விற்பனை செய்யும் விற்பனையாளர்களை ஒழுங்காகப் பணி செய்யவிடாமல் செய்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பறக்கும் படையின் புனிதமான நோக்கத்தை சிதறடிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கேயாவது ஒழுங்கீனங்கள் தென்பட்டால், அந்த ஒழுங்கீனங்களை அப்புறப்படுத்தவும், அந்த ஒழுங்கீனங்களோடு தொடர்புடையவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும்தான் பறக்கும் படை அமைக்கப்பட்டிருக்கிறது. எங்காவது ஒட்டன்சத்திரம் பகுதியில் பறக்கும் படை தவறாக நடந்திருக்குமானால், குறிப்பிட்ட பறக்கும் படை பற்றிய விவரங்களை எனக்குத் தெரிவித்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்குதல்.

*3767. **திரு. எம். முகமது சித்திக்** :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுமா ?

9-50 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சத்துணவுக் கூடங்களில் உணவு உண்ணும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுகிற பரிசீலனை இப்போது இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எவர்சில்வர் தட்டு சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதால் அதிக செலவாகாது. ஏறத்தாழ அலுமினியத் தட்டுக்கும் எவர்சில்வர் தட்டுக்கும் சற்றேதான் விலை வித்தியாசம் உள்ளது. மேலும் அலுமினியம் என்ற விஷத் தன்மை அந்தத் தட்டில் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். அந்தத் தட்டில் தொடர்ந்து உண்ணுவதால் அந்த விஷத் தன்மையால் அந்தக் குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலையும்

1990 ஏப்ரல் 19]

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, இப்போது பறக்கும் படை என்ற ஒன்று கூட்டுறவுச் சங்கங்களிலே திடீரென்று புகுந்து, ஒழுங்காக விற்பனை செய்யும் விற்பனையாளர்களை ஒழுங்காகப் பணி செய்யவிடாமல் செய்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பறக்கும் படையின் புனிதமான நோக்கத்தை சிதறடிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கேயாவது ஒழுங்கீனங்கள் தென்பட்டால், அந்த ஒழுங்கீனங்களை அப்புறப்படுத்தவும், அந்த ஒழுங்கீனங்களோடு தொடர்புடையவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும்தான் பறக்கும் படை அமைக்கப்பட்டிருக்கிறது. எங்காவது ஒட்டன்சத்திரம் பகுதியில் பறக்கும் படை தவறாக நடந்திருக்குமானால், குறிப்பிட்ட பறக்கும் படை பற்றிய விவரங்களை எனக்குத் தெரிவித்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்குதல்.

*3767. **திரு. எம். முகமது சித்திக்** :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுமா ?

9-50 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சத்துணவுக் கூடங்களில் உணவு உண்ணும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுகிற பரிசீலனை இப்போது இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எவர்சில்வர் தட்டு சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதால் அதிக செலவாகாது. ஏறத்தாழ அலுமினியத் தட்டுக்கும் எவர்சில்வர் தட்டுக்கும் சற்றேதான் விலை வித்தியாசம் உள்ளது. மேலும் அலுமினியம் என்ற விஷத் தன்மை அந்தத் தட்டில் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். அந்தத் தட்டில் தொடர்ந்து உண்ணுவதால் அந்த விஷத் தன்மையால் அந்தக் குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலையும்

இருக்கின்றது. ஆகவே அதுபோன்ற அலுமினியத் தட்டுக்களை நீக்கிவிட்டு எவர்சில்வர் தட்டுக்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அலுமினியப் பாத்திரங்களும் விஷத் தன்மை கொண்டதல்ல. அப்படி விஷத் தன்மை கொண்டதாக இருந்தால் மொத்த ஜனத்தொகையில் மூன்றிலே ஒரு பங்கு இந்நேரம் மடிந்து இருக்க வேண்டும். அந்த அளவிற்கு கிராமங்களில் மக்கள் இன்னும் அலுமினியப் பாத்திரங்களைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள். அது நல்ல முறையில் சுத்தம் செய்யப்பட்டு உலர வைக்கப்பட வேண்டும். ஈரத்தோடு வைத்தால் அதிலே சில கெடுதிகள் ஏற்படும் என்பதால் அது உலர வைக்கப்பட வேண்டும். அந்த வழிமுறைகள் எல்லாம் இப்போது சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களுக்குக் கற்றுத் தரப்பட்டிருக்கிறது. சத்துணவுக் கூடங்களில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டுக்களை வழங்க வேண்டுமென்றால் இந்த அரசுக்குக் கூடுதலாக 5 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. எனவே அரசு நிதிநிலையைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு சட்ட மன்ற பேரவை உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள், பெரிய பெரிய தொழில் அதிபர்கள், நன்கொடையாளர்களை அணுகி அவர்களின் மூலமாக அந்தக் கூடங்களுக்கு எவர்சில்வர் தட்டுகளை வழங்குகிற முயற்சியை மேற்கொள்வீர்களேயானால் அரசு அதை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவருடைய முயற்சியில் வெள்ளித் தட்டே கூட வழங்கலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய யோசனை மிகவும் சிறப்பானது. அத்தகைய முயற்சிகளை நிச்சயமாக நான் எடுத்துக் கொள்வேன். எவர்சில்வர் தட்டுகளை சமூக சங்கங்கள் வழங்க முன்வந்தால் அலுமினியத் தட்டுக்கான தொகையை அந்தச் சங்கங்களுக்குக் கொடுத்து, மீதித் தொகையை அவர்கள் ஏற்றுக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கனவே பயன்படுத்திய அலுமினியத் தட்டை வேண்டுமானால் அப்படியே கொடுத்துவிட்டு மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆலோசனையை வேண்டுமானால் கருத்திலே எடுத்துக் கொள்ளலாம்.

1990 ஏப்ரல் 19]

ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

*4994. திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலியில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி கெதிசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 22 அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இருந்தும்கூட ஆக்ஸ்ஃபோர்டு ஆஃப் சவுத் என்று சொல்லக்கூடிய அந்தப் பராமரிப்பு இல்லங்கள் நெல்லையிலே இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. ஆகவே அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி கெதிசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு முன்பு ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் இருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அந்த இல்லம் வ. உ. சிதம்பரனார் மாவட்டத்திற்குள் வந்து இருக்கிறது. திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் அரசு ஆதரவற்ற குழந்தைகள பராமரிப்பு இல்லம் தற்போது இல்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த மாவட்டத்தில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் துவக்க வேண்டும் என்று சமூக நல இயக்குநர் அவர்கள் அரசுக்கு குறிப்பு அனுப்பி இருக்கிறார். அது பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ரவி அருணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து அரசு பராமரிப்பு இல்லங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கிற 22 அரசு பராமரிப்பு இல்லங்களிலும் பெரும்பாலான இல்லங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சில அரசால் வழங்கப்பட்டவை ; சில தனியார் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டவை ; சில நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டவை. எனவே எந்த இல்லத்துக்கும் தொலைக் காட்சிப் பெட்டி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களோ அங்கே ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அவரே வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*5342. திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளச்சல் சட்டமன்றத் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கக்கோட்டுதலை ஊராட்சி, கட்டிமாங்கோடு ஊராட்சி, குருந்தன்கோடு ஊராட்சி, தலக்குளம் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கு. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கக்கோட்டுதலை, கூட்டுமாங்கோடு, குருந்தன்கோடு, தலக்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகள் மிக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காத பகுதி. ஆகவே, அந்த ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் கு. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகின்ற பொழுது அந்தக் கிராமங்களிலே நீர் ஆதாரம் இல்லாத சூழ்நிலையிலேதான் பக்கத்திலே இருக்கிற நீர் ஆதாரம் இருக்கிற இடத்திலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டிய நான்கு ஊராட்சிகளிலும் 27 குடியிருப்புகள்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கிற 22 அரசு பராமரிப்பு இல்லங்களிலும் பெரும்பாலான இல்லங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன. அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சில அரசால் வழங்கப்பட்டவை ; சில தனியார் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டவை ; சில நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டவை. எனவே எந்த இல்லத்துக்கும் தொலைக் காட்சிப் பெட்டி இல்லை என்று உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களோ அங்கே ஒரு தொலைக் காட்சிப் பெட்டியை அவரே வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*5342. திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குளச்சல் சட்டமன்றத் தொகுதி, குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட கக்கோட்டுதலை ஊராட்சி, கட்டிமாங்கோடு ஊராட்சி, குருந்தன்கோடு ஊராட்சி, தலக்குளம் ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கு. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இல்லை.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கக்கோட்டுதலை, கூட்டுமாங்கோடு, குருந்தன்கோடு, தலக்குளம் ஆகிய ஊராட்சி பகுதிகள் மிக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள். குடிப்பதற்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காத பகுதி. ஆகவே, அந்த ஊராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் கு. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருகின்ற பொழுது அந்தக் கிராமங்களிலே நீர் ஆதாரம் இல்லாத சூழ்நிலையிலேதான் பக்கத்திலே இருக்கிற நீர் ஆதாரம் இருக்கிற இடத்திலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக்காட்டிய நான்கு ஊராட்சிகளிலும் 27 குடியிருப்புகள்

1990 ஏப்ரல் 19]

உள்ளன. அந்த 27 குடியிருப்புகளிலும், ஞாரோடு என்ற குடியிருப்பில் ஒரு ஆழ் குழாய்க் கிணறு பொதிக்கப்பட்டுள்ளது, கக்கோட்டுதலை என்ற இடத்தில் இரண்டு பொது நல்லிகளும் இரண்டு ஆழ்க் குழாய்க் கிணறுகளும் இருக்கின்றன. புள்ளிச் சன்விளை என்ற இடத்தில் மூன்று பொது நல்லிகளும் ஒரு ஆழ் குழாய்க் கிணறும் உள்ளது. செக்காரவிளை என்ற இடத்தில் முப்பதாயிரம் லிட்டர் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஒன்று உள்ளது. காட்டச்சி என்ற இடத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு உள்ளது. ஆகவே, இது போன்ற எல்லாயிடங்களிலுமே கொடுக்கப்பட்டிருக்கின்ற இடங்களிலேயெல்லாம் ஆழ்க் குழாய்க் கிணறுசளும், குடிநீர்த் தேக்கத் தொட்டிகளும் இருக்கின்றன. மேலும் உறுப்பினரவர்கள் இந்த இடங்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும் என்று கருதுவார்களேயானால் அது குறித்து ஆய்வு செய்து அந்த இடங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னதைப் போல அங்கே குடிநீர்த் தொட்டிகள் இருக்கின்றன. ஆனால், குடிநீர்த் தொட்டிகளுக்கு ஆதாரமான கிணறுகளிலே தண்ணீர் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன். ஆழ் குழாய்க் கிணறுகள் ஏராளமாக போடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆழ் குழாய்க் கிணறுகளிலே நல்ல தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவ்வளவு உப்புத் தண்ணீராக இருக்கின்ற காரணத்தினாலே அந்த மக்களுக்கு எந்த விதமான பிரயோசனமும் இல்லாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. தலக்குளம் ஊராட்சிக்குப் பக்கத்திலே உள்ள பெரிய குளத்தில் ஏராளமாக தண்ணீர் இருக்கிறது. அந்தக் குளம் 150 ஏக்கரா பரப்பளவு உள்ளது. எந்தக் காலத்திலும் வற்றாத குளம். அந்தக் குளத்திலே ஒரு கிணறைத்தோண்டி—பெரிய கிணறைத்தோண்டி, இந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தித் தர முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தினைக் குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 19

கால்நடை மருத்துவக் கல்லூரி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

*வினா 1540. திரு. வீ. பெ. துரைசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால் நடை மருத்துவக் கல்லூரி நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

கால்நடை மருத்துவமனை.

*வினா 3119. திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

இராசபாளையம் நகரத்தில் உள்ள கால் நடை மருத்துவ மனையை பெரிய மருத்துவமனையாக(Clinician Centre) மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால் நடை மருத்துவமனைகளை தரம் உயர்த்தும் திட்டத்தின் கீழ் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இராச பாளையம் கால் நடை மருத்துவமனை உட்பட 75 (எழுபத் தைந்து) கால் நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவ மனைகளாக (Clinician Centre களாக) தரம் உயர்த்துகின்ற செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வி. பி. இராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆய்வில் உள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1990 ஏப்ரல் 19

கால்நடை மருத்துவக் கல்லூரி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

*வினா 1540. திரு. வீ. பெ. துரைசாமி :

வருவாய்த் துறை என்பது மிகவும் முக்கியமான துறை ஆகும். ஒரு காலத்தில் ஆண்ட குறுநில மன்னர்கள் எல்லாம் நில வரியையே முதன்மையாகக் கொண்டு ஆட்சி செய்த காலம் எல்லாம் உண்டு.

10-25 மணி

ஆனால் இன்றைக்கு நிலவரி இல்லாமல் ஆட்சி செய்யக்கூடிய அளவுக்கு பல வழிகளில் அரசுக்கு வருமானம் ஈட்டித் தரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நிலவரியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 33.45 கோடி ரூபாய்க்கு பாக்கி என்று பாக்கிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த குறைந்த அளவு பாக்கியை வசூல் செய்வதில் இன்றைக்கு வருவாய்த் துறை அலுவலர்கள் மிகவும் தீவிரமாக இறங்கி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 3, 4 வருட காலமாக தமிழகத்திலே பருவ மழை அங்கொன்றும் இங்கொன்றுமாக பெய்ததன் காரணமாக நிறைய மாவட்டங்கள் இன்றைக்கு வறட்சிக்கு இலக்காகி இருக்கிறது. அப்படி வறட்சிக்கு இலக்காகி இருக்கின்ற அந்தப் பகுதிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஆய்வு செய்து அந்தந்தப் பகுதிகளை வறட்சிப்பகுதிகளாக அறிவித்து அங்கே இருக்கக்கூடியவர்களுக்கு நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அங்கே வறட்சியாக உள்ள அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் குறிப்பாக என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கின்ற குளத்தூர்

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 20—4—1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

64. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

65. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான பதினோழாவது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

108. கோரிக்கை எண் 1—வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990—91 (தமிழ், ஆங்கிலம்).

[1990 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 20—4—1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

64. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

65. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான பதினோழாவது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

108. கோரிக்கை எண் 1—வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990—91 (தமிழ், ஆங்கிலம்).

1990 ஏப்ரல் 19]

110. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

111. வருவாய்த் துறை பற்றிய செயலாக்கத்திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

112. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1989-90.

113. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தியொன்றாவது அறிக்கை, 1989-90.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 19

இணைப்புகள்.

(48-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கொள்கை விளக்கக் குறிப்பு—1990–91

1. முன்னுரை :

நிருவாக மேம்பாட்டுக்காக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் என்ற அமைப்பு கலைக்கப்பட்டு நில வருவாய் மற்றும் நில நிருவாகம் குறித்த அலுவல்கள் மாநில அளவில் அதிகார வரம்பு கொண்ட மூன்று ஆணையர்களிடம் (சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர், சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர்) பகிர்ந்தளிக்கப்பட்டது. மாவட்ட வருவாய் மற்றும் பொது நிர்வாகம், நிலவரி மற்றும் தொடர்புடைய மேல் வரிகள் விதித்தல் மற்றும் வசூலித்தல் ஆகிய அலுவல்கள் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் பொறுப்பிலும், நில எடுப்பு, நில ஒப்படை, நில உரிமை மாற்றம், வீட்டுமனை ஒப்படைகள் நில வருவாய், ஆவணங்கள் பராமரித்தல் மற்றும் நிலப் பட்டாக்கள் வழங்கல் குறித்த அலுவல்கள் நில நிருவாக ஆணையர் பொறுப்பிலும், நிலச் சீர்திருத்தம், நில உச்சவரம்பு, நில குடிவாரம், வேளாண்மை வருமானவரி, நகர்ப்புற நிலவரி குறித்த அலுவல்கள் நிலச் சீர்திருத்த ஆணையர் பொறுப்பிலும் ஒப்படைக்கப்பட்டது.

2. மாவட்ட அளவில் இப்பணிகள் மாவட்ட ஆட்சியர், மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால், கோட்டாட்சியர், வட்டாட்சியர், நில வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர்கள் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட அளவிலான நிர்வாக வரம்பு, நில நிருவாகம், வருவாய் நிருவாகம் மற்றும் அத்தியாவசிய மீட்புப் பணிகளுடன் நின்று விடாமல் பல வளர்ச்சி, சமூக நல மேம்பாட்டுப் பணிகளையும் உள்ளடக்கியுள்ளது. இம்மாநிலத்தில் 21 மாவட்டங்கள், 60 கோட்டங்கள், 172 வட்டங்கள், ஒரு கூடுதல் வட்டம், 1,101 உள் வட்டங்கள் மற்றும் 17,275 வருவாய் கிராமங்கள் உள்ளன.

2. கிராம நிருவாகம் :

தற்போதுள்ள கிராம நிருவாக அமைப்பினை ஆராய்ந்து அதனை மேம்படுத்துவதற்கான வழி வகைகளைக் கண்டறிய ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. இலட்சுமிகாந்தன் பாரதி அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1990 ஏப்ரல் 19]

3. வருவாய் ஆட்சி வரம்பு :

மாவட்ட நிருவாகத்தை மேலும் செம்மைப் படுத்தவும், பொதுமக்கள் குறைகளை விரைவில் தீர்க்கவும், அரசின் நலத் திட்டங்களைக் காலதாமதமின்றி செயற்படுத்தவும், பெரிய அளவிலான மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் முதலியவை படிப்படியாகப் பிரிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன.

2. வடஆற்காடு மாவட்டம், 30–9–1989 முதல் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு வடஆற்காடு — அம்பேத்கார் மாவட்டம் என்றும், 2. திருவண்ணாமலையைத் தலைமை யிடமாகக் கொண்டு திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வட ஆற்காடு-அம்பேத் கார் மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் ஒன்று 30–9–1989 முதல் ஏற்படுத்தப் பட்டது. சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் வட்டம், இரண் டாகப் பிரிக்கப்பட்டு, 15-12-1989 முதல் படமுடிப்பாளையத் தைத் தலைமையிடமாகக் கொண்டு பரமத்தி வேலூர் வட்டம் ஏற் படுத்தப்பட்டது. இதுபோலவே, கோயம்புத்தூர் மாவட்டத்தி லுள்ள பல்லடம் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருப்பூ-ரைத் தலைமையிடமாகக் கொண்ட திருப்பூர் வட்டம் 15–12–1989 முதல் ஏற்படுத்தப்பட்டது. 15-12-1989 முதல் பல்லடம் வட்டத்தில் ஒன்றும் திருப்பூர் வட்டத்தில் ஒன்றுமாக இரு புதிய உள் வட்டங்கள் (பிர்க்காக்கள்) ஏற்படுத்தப்பட்டன.

4. மாவட்ட வருவாய் நிருவாகம் :

அரசின் பல்வேறு நலத் திட்டங்களும், வருவாய்த் துறையின் மூலமே செயற்படுத்தப்படுவதால், அன்றாடம் அரசு நிர்வாகத் தில் பொது மக்கள் தங்களின் பல்வேறு தேவைகளுக்காக பெரும் பாலும் வருவாய்த்துறை அதிகாரிகளையே நாடி வருகின்றனர். எனவே, அரசு அலுவலகங்களில், மனுக்கள் பெருவதற்கென ஒரு செயிலிடமேடை, பொதுமக்களை வழி நடத்திச் செல்வ தற்கும், அரசுத் திட்டங்களின் சிறப்பு அம்சங்களை எடுத்துரைப் பதற்கும், தகவல் அறிவிப்புப் பலகை வைத்தல், பல்வேறு அரசு நலத் திட்டங்களின் கீழ் நன்மை பெறுவதற்கென தேவைப்படும் தகுதிகள் முதலியவற்றை தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களை பொது மக்களுக்கு வீநியோகித்தல், நிலையான சாதிச் சான்றிதழ் கள் வழங்குதல், அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் போன்றவற்றின் மூலம் மாவட்ட வருவாய் நிர்வாகத்தை அரசு சீர்திருத்தம் செய்துள்ளது. தங்கள் தேவைகளையும், குறை களையும் தெரிவித்து பொதுமக்கள் சமர்ப்பிக்கும், மனுக்களின் மீது துரித நடவடிக்கை எடுக்கவும், வருவாய்த் துறை அதிகாரி களை பொதுமக்கள் பல்வேறு நிலைகளில் சந்திக்க ஒரு வாய்ப்பு

[1990 ஏப்ரல் 19

அளிப்பதற்கும், மனுநீதித் திட்டம் மற்றும் குறை தீர்க்கும் நாள் ஆகிய இரு பெரும் திட்டங்களை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.

1 மனுநீதித் திட்டம் :

மனுநீதித் திட்டத்தின் கீழ் மாவட்டாட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள்/கோட்டாட்சியர்கள் மற்ற, இதர அரசு துறைகளின் அலுவலர்களுடன் தங்களது அதிகார வரம்பின்கீழ் வரக்கூடிய கோட்டங்களில்/கிராமங்களில், ஒவ்வொரு மாதமும் சுழல் முறையில் சென்று பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை சம்பந்தப்பட்ட இடத்திலேயே தீர்த்திட நட வடிக்கை எடுக்க வண்டும்.

2 குறை தீர்க்கும் நாள் :

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்டங்களில் குறை தீர்க்கும் நாளாகக் கருதப்படுகிறது. மாவட்டாட்சியர்/கோட்டாட் சியர்/வட்டாட்சியர் ஆகியோர் ஒவ்வொரு திங்கட்கிழமையும், தங்களது தலைமை இடங்களில் இருந்து கொண்டு, மனுதாரர் களுக்குப் பேட்டியளித்து மனுக்களைப் பெற்றுக் கொண்டனர். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட மனுக்கள் மீது உரிய நட வடிக்கை எடுத்து முடிக்க, தொடர்புடைய அலுவலருக்கு அனுப் பப்படுகிறது. சமீபத்தில், குறை தீர்க்கும் நாள் நடத்தப்படும் முறைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு இத்திட்டம், சீர் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

3 குறை தீர்க்கும் பிரிவுகள் :

துறைத் தலைமை அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் ''குறை தீர்க்கும் பிரிவுகள்'' ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்த குறை தீர்க்கும் பிரிவுகள் மூன்று முக்கிய பிரிவினரான (1) பொதுமக்கள், (2) அரசு அலுவலர்கள் மற்றும் (3) ஓய்வு ஊதியர்கள்—ஆகியோரின் குறைகளைக் கவனித்து வருகின்றன.

4 ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் :

ஓய்வூதியர்களின் குறை தீர்க்கும் நாள் அனைத்து மாவட்டங் களிலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படுகிறது. அப் பொழுது துறை அலுவலர்களும் மாநிலக்கணக்காய்வுத் துறைப் பிரதிநிதிகளும் ஒன்றாக அமர்ந்து ஓய்வூதியம், கருணைக் கொடை, குடும்ப நல நிதி, வருங்கால சேம நிதி மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகிய கோரிக்கைகளை பைசல் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

1990 ஏப்ரல் 19]

5 வருவாய்த்துறை கட்டடங்கள் :

படிப்படியான முறையில் வாடகைக் கட்டடங்களில் அல்லது போதிய இடவசதி இல்லாத கட்டடங்களில் அமைந்துள்ள வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்களை கட்டுவதை அரசு மேற்கொண்டு வருகிறது.

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் :

இம்மாநிலத்திலுள்ள 60 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில், 52 அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 8 அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவைகளில், 5 வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நிருவாக ஒப்பளிப்பு ஏற்கெனவே அளிக்கப்பட்டது. 1990–91-ம் நிதியாண்டில் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பழனியில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

வட்டாட்சியர் அலுவலகங்கள் :

இம்மாநிலத்திலுள்ள 172 வட்டாட்சியர் அலுவலகங்களில், 159 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசு கட்டடங்களில்இயங்கி வருகின்றன. 13 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவைகளில் 7 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே நிருவாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. 1990–91 ஆம் நிதியாண்டில் செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள செய்யூர் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

6 நிலவரி :

1.1. ஒரு நிலத்தின் இனம், மண்வளம், தரம் ஆகியவைகளைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை வரியே நிலவரி என்பதாகும். நிலவரியின் மேல் விதிக்கப்படும் உள்ளூர் செஸ் மேல்வரி, கூடுதல் வரி விதிப்பு, கூடுதல் தண்ணீர் வரி போன்றன நிலவரி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக அமைகின்றன. 1-7-1967—லிருந்து புஞ்சை நிலங்கள் அனைத்திற்குமான அடிப்படை வரி தள்ளுபடி செய்யப்பட்டது. இதே போன்று 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைவாக நன்செய் நிலம் வைத்திருப்போருக்கு, ஒருங்கிணைந்த நன்செய் தீர்வைகளிலிருந்து நிலவரி மட்டும் 1-7-1971 முதல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 19

1.2. 1986–87, 1987–88 மற்றும் 1988–89ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடுமையான வறட்சி விவசாயிகளின் வகை முறை வாய்ப்பினைக் குறைத்து விட்டது. இதன் காரணமாக அவர்களிடம் நிலவரியை சுமுகமான முறையில் மட்டும்தான் வசூலிக்கப்பட்டுள்ளன. நிலவரி வசூலில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கடந்த மூன்று விளைச்சல் ஆண்டுகளின் நிலவரி வசூலின் நடப்பு மற்றும் நிலுவைக்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1)	(2) விளைச்சல் ஆண்டு 1396 (1-7-1986 முதல் 30-6-1987 வரை).	(3) விளைச்சல் ஆண்டு 1397 (1—7—1987 முதல் 30—6—1988 வரை).	(4) விளைச்சல் ஆண்டு 1398 (1—7—1988 முதல் 30—6—1989 வரை.)
	(ரூபாய் கோடியில்.)		
நடப்பு—			
கேட்பு	24.60	22.25	23.95
வசூல்	18.11	20.28	20.00
பாக்கி	6.49	1.97	3.95
நிலுவை —			
கேட்பு	39.94	37.44	33.89
வசூல்	6.47	7.52	4.39
பாக்கி	33.47	29.92	29.50
மொத்தம்—			
கேட்பு	64.54	59.69	57.84
வசூல்	24.58	27.80	24.39
பாக்கி	39.96	31.89	33.45

1990 ஏப்ரல் 19]

1986–87, 1987–88 மற்றும் *1988–89*ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் வறட்சி நிலவியது. இருப் பினும் நிலவரி வசூலில் வருவாய்த்துறை அலுவலர்களால் கடைப்பிடிக்கப்பட்ட சுமுகமான அணுகுமுறையின் காரணமாக நிலவரி வசூல் நடப்பு கேட்பில் விளைச்சல் ஆண்டு *1396*இல் *74* சதவீதமும் விளைச்சல் ஆண்டு *1397*-இல் *91.1* சதவீதமும் விளைச்சல் ஆண்டு *1398* இல் *83.50* சதவீதமும் வசூலாகி யுள்ளது. இருந்தபோதிலும் நிலவரி நிலுவை கேட்பில் கணிச மான அளவு வசூலிக்க முடியவில்லை.

2.1 பாதகச் சூழ்நிலைக்கேற்ப தள்ளுபடி செய்தல் :

உழவர் ஒருவர் குறிப்பிட்ட காரணத்திற்காகத் தன் நிலத்தில் வரி தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று விரும்பினால் அவர் எந்த நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விரும்பு கிறாரோ அந்த நிலத்தைக் குறிப்பிட்டு உரிய நேரத்தில் சம்பந்தப் பட்ட வருவாய் அலுவலருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். பின்னர் பயிராய்வு அலுவலரின் கருத்தின் அடிப் படையில் அதிகாரமளிக்கப்பட்ட வருவாய் அலுவலர் வரியை தள்ளுபடி செய்வார். பாதிக்கப்பட்ட உழவர்களுக்குப் பாதகச் சூழலுக்கேற்ப வரித் தள்ளுபடி செய்யப்படுமே தவிர செஸ் வரியும் கூடுதல் செஸ் வரியும் தள்ளுபடி செய்யப்படுவதில்லை.

அசாதாரண சூழ்நிலைகளில் நில வரியை தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் தள்ளுபடி செய்தலும் :

2.2. வழக்கத்திற்கு மாறுபட்ட இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் வறட்சி அல்லது பஞ்ச காலங்களில் பொதுவாக பயிருக்கு இழப்பு ஏற்படும்போது அரசு வரி விதிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது. அல்லது தள்ளுபடி செய்கிறது. அவ்வா றான நேர்வுகளில் அரசுக்கு செலுத்த வேண்டிய நிலவரி பாக்கி மற்றும் அரசு கடன்களை வசூலிப்பதை அடுத்த விளைச்சல் ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட நிலத்தில், நடப்பு விளைச்சல் ஆண்டில், பயிர் விளைச்சல் *50* விழுக்காடும் அதற்குக் குறைவாகவும் இருக்குமானால், அந்நிலத்தைப் பொறுத்தவரையில் வசூலிக்கப்பட வேண்டிய நிலவரியும் உள்ளூர் வரியும் உள்ளூர் தலைமேல் வரியும் அரசுக் கடன்களும் அடுத்த விளைச்சல் ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்படும். *1398*ஆம் விளைச்சல் ஆண்டில் கீழ்க்கண்ட *12* மாவட்டங்களில் மட்டும் ரூ. *571.87* இலட்சத்திற்கு நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது:

(1) காமராசர்,

(2) இராமநாதபுரம்,

(3) பசும்பொன்-தேவர்திருமகன்.

(4) திருச்சிராப்பள்ளி,

(5) மதுரை,

(6) புதுக்கோட்டை,

(7) திண்டுக்கல்-காயிதே-மில்லத்,

(8) திருநெல்வேலி-கட்டபொம்மன்,

(9) பெரியார்,

(10) சிதம்பரனார், மற்றும்

(11) வடஆற்காடு,

(12) தஞ்சாவூர்.

2.3 பயிராய்வு சான்றிதழ் வழங்குதல்:

பயிர் விளைச்சல் 50 சதவீதமும் அதற்கு குறைவாகவும் இருக்குமானால் அத்தகைய நிலங்களுக்கு கிராம வாரியாக பயிராய்வு சான்றிதழ் வழங்குவதற்கான அதிகாரம் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் மூலம் பெற்ற கடன்களை மாற்றியமைக்கலாம்.

6. தண்ணீர்க் கட்டணம் :

பயிரிடும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை கூடுதல் தண்ணீர்த் தீர்வை ஆகியவற்றில் அரசின் கொள்கையில் எந்தவித மாற்றமும் இல்லை, வருவாய்த் துறையின் 8-9-1977 ஆம் நாளிட்ட 1742-ஆம் எண் அரசாணையின்படி மாநிலத்தில் பாசனக் கட்டணங்கள் சீர்திருத்தம் செய்வது தொடர்பாக வழிவகை செய்ய அரசு ஒரு குழுவினை நியமித்தது, திரு. இராம்சந்தர், இ.ஆ.ப. அவர்களின் தலைமையிலான அக்குழு தனது அறிக்கையினை அரசிற்கு 1979ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. புன்செய் நிலங்களின் மீதான தீர்வையினை தள்ளுபடி செய்வது, மின் கட்டணங்களைக் குறைப்பது ஆகியவை தொடர்பாக அரசு அளித்த சலுகைகளைக் கணக்கில் கொண்டு ஒரு அறிக்கையினை அளிப்பதற்காக அவரையே தலைவராகக் கொண்ட மற்றுமொரு குழுவினை அரசு நியமித்தது. இக்குழுவும் அரசுக்கு 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்தது. இவ்விரு குழுக்களின் பரிந்துரைகள அரசின் ஆய்வில் உள்ளன. கீழ்பவானி திட்டம் மற்றும்

1990 ஏப்ரல் 19]

பரம்பிக்குளம், ஆளியாறு திட்ட ஆயக்கட்டு நிலங்களின் மீதான தற்போது நடைமுறையிலுள்ள பயிர்க்கட்டுப்பாட்டினை அரசு நீக்கியதோடல்லாமல், அத்திட்டப் பகுதிகளில் நன்செய் பயிர்கள் பயிரிட்டதற்காக விதிக்கப்பட்ட அபராதக் கட்டணங்களின் முன்பாக்கிகளையும் ரத்து செய்துள்ளது,

8. பட்டா பாஸ் புத்தகத் திட்டம் :

*1983*ஆம் வருட தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தகச் சட்டம் (சட்டம் 4/1986) 1986-ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் கொண்டுவரப்பட்டது, இந்தச் சட்டத்தின்படி, வட்டத்தில் உள்ள ஒவ்வொரு நில உரிமைதாரருக்கும் வட்டாட்சியர் பட்டா பாஸ் புத்தகம் வழங்க வேண்டும். இந்த பட்டா பாஸ் புத்தகம் நிலங்களின் நாளது வரையிலான அனைத்து விவரங்களைக் கொண்டுள்ளதாக இருக்கும். வருவாய்த் துறை நிருவாகத்திற்கு பயனுள்ள ஆவணங்களாக அமையும். நிலங்களில் பயிர் செய்யும் நபர்களின் பெயர்கள் கூட்டுப் பட்டாதாரர்களின் பெயர்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பங்கு, பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரி, பட்டாதாரர் செலுத்திய வரி விவரங்கள், நிலங்களின் மீதுள்ள வில்லங்கம் ஆகிய விவரங்களும் பட்டா பாஸ் புத்தகத்தில் காண்பிக்கப்படும். விற்பனை, பரிவர்த்தனை. வெகுமதி, அடமானம் போன்ற நேர்வுகளினால் பத்திரம் பதியப்படும்பொழுது இப்பட்டா பாஸ் புத்தகத்தைத் தாக்கல் செய்யவேண்டும், அதே போன்று, நிதி நிறுவனங்கள் நிலங்களின் மீது கடன் வழங்கும்பொழுது இப் பட்டா பாஸ்புத்தகம் தாக்கல் செய்யப்பட வேண்டும். நில உடமை கைமாறும்பொழுதும் நிலங்களின் மீது கடன் வழங்கும் போதும் பட்டா பாஸ் புத்தகத்தில் பதிவுகள் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது, இந்தப் பட்டா பாஸ் புத்தகம் நில உடமைக்கு சட்டபூர்வமான ஆதார ஆவணமாகும். வீட்டு மனைகளுக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்க சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பட்டா பாஸ் புத்தக சட்டத்திற்கான விதிகள் இயற்றப்பட்டுள்ளன.

2. முதல்படியாக, இந்தச் சட்டத்தின் சில பிரிவுகள் 1—10—1987 முதல் பரிட்சார்த்த முறையில் செங்கை-அண்ணா மாவட்டத்தில் திருத்தணி வட்டத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்திலும், செயல்படுத்தப்பட்டு வருகிறது, இந்த வட்டங்களில் இத்திட்டம் செயல்படும் விதத்தை அரசு சீராய்வு செய்து வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 12,224 பட்டா பாஸ் புத்தகங்கள் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் வரை வழங்கப்பட்டுள்ளன.

[1990 ஏப்ரல் 19

9. நில மாற்றம்:

தொழிற்சாலைகள் மற்றும் பல்வேறு திட்டப் பணிகளை மாநிலத்தில் அமைப்பதற்கும், அதன் வாயிலாக மாநில பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்யும் நோக்கத்துடனும், மாநில அரசு நிலங்கள் இந்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மத்திய அரசு அலுவலகங்கள், திட்டப்பணிகள் ஆகியவற்றை அமைக்க வழங்கப்படுகின்றன. பொதுவாக, மேற்காணும் நிலங்கள் மத்திய அரசு துறைகளுக்கு 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். சில சிறப்பு இனங்களில் மட்டும் அவற்றின் தேவை, நிலத்தின் தன்மை, எதிர்கால பயன்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு நிலங்கள் உரிமை மாற்ற அடிப்படையில் வழங்கப்படலாம்.

2. ரெயில்வே துறையினர், பாதுகாப்பு மற்றும் இதர முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கு அரசு நிலங்கள் பொதுவாக உரிமை மாற்ற அடிப்படையில் வருவாய் நிலை ஆணையின் கீழ் நில மதிப்பு மற்றும் கல்கிரயம் ஆகியவற்றை வசூலித்துக் கொண்டு வழங்கப்படும்.

3. சென்னை கடற்கரையிலிருந்து லஸ் வரைக்கும் துரித ரெயில் போக்குவரத்துத் திட்டத்தை அமலாக்கும் பொருட்டு (MRTS) மாநில அரசு, அதன் நிலத்தை பெருநகர் போக்குவரத்துத் திட்டத்திற்கு (ரெயில்வேஸ்) (M. T. P. Railways) இலவசமாகவே வழங்கியுள்ளது.

10. நில உரிமை மாற்றம் :

வருவாய் நிலை ஆணை 24-ன் கீழ் தனிப்பட்ட நபர், நிறுவனம் அல்லது உள்ளாட்சி நிறுவனம், பள்ளி சத்திரம், மருத்துவமனை, சாலை, உள்ளாட்சி நிறுவன அலுவலகக் கட்டிடம் போன்ற பொது நோக்குகளுக்கு, வழங்குவதற்கான நிலங்கள் இருக்குமானால், சூழ்நிலைக் கேற்றவாறு முழு நிலக்கிரயம் அல்லது சலுகை அடிப்படையிலான நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு அல்லது நிலக் கிரயமின்றி அரசு நில உரிமை மாற்றம் செய்கிறது.

2. கீழ்க்கண்ட அலுவலர்களுக்கு, அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வரம்புக்குள் உரிமை மாற்றம் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 19]

தனிப்பட்ட நிறுவனம் அல்லது நபர்கள்:

அலுவலர்.	அரசு சார்புள்ள நிறுவனம்.	நிலக் கிரயத் துடன்.	நிலக் கிரய மின்றி.
(1)	(2)	(3)	(4)
	ரூ.	ரூ.	ரூ.
நில நிர்வாக ஆணையர் ..	1,00,000	50,000	5,000
மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர்	25,000	15,000	5,000
கோட்டாட்சியர் ..	10,000	5,000	2,000

3. அரசின் கைவசமுள்ள நிலங்கள் அருகிவரும் சூழ்நிலையில், அரசு நிலங்களை மாநில அரசு மற்றும் மைய அரசுத் துறைகள், பொதுமக்கள், தனியார் அமைப்புகள் மற்றும் பிறர் கோருவது பெருகி வரும் நிலையில், நீர்நிலை மற்றும் மேய்க்கால் புறம்போக்கு போன்ற நிலங்களை பாதுகாத்து உயிரின வாழ்க்கைச் சூழலை சமநிலைப்படுத்தும் பொருட்டு அரசு நிலங்களை வழங்குவதில் சில வழிமுறைகளை வகுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிமுறைகள்படி அரசு நிலங்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் மட்டுமே செய்யப்படல் வேண்டும். மைய அரசு துறைகள் மற்றும் அமைப்புகள் உள்ளிட்ட பிற இனங்களில் அரசு நிலம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். மேற்கண்ட வழிமுறைகளிலிருந்து விதிவிலக்கு அளித்து உரிமை மாற்றம் செய்ய அவசிய முள்ள இனங்களில் தகுதி அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்படும்.

4. நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனைகள் மற்றும் பயிரிடத் தக்க அரசு நிலங்கள் தொடர்ந்து ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

11. வீட்டு மனை வழங்குதல் :

பொருளாதார நிலையில் நலிவுற்றவர்கள் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் வகையில் வீடில்லாதவர்களுக்கு நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வருவாய் நிலை ஆணை எண் 21-இன் கீழ் உள்ள விதிகளின்படி வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 19

2. இத்திட்டத்தின்படி பயன்பெற ஆண்டு வருமானம் ரூ. 3,500-க்குக் குறைவாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்களாகக் கருதப்பட்டு வீட்டு மனைப் பட்டா பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாகிறார்கள். போரில் வீர மரணம் அடைந்த அல்லது இயலாமையிலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்கள், சுதந்திர போராட்ட வீரர்கள், நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள், முன்னாள் படை வீரர்கள், கொத்தடிமைச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள், பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலை யிழந்த பொற்கொல்லர்கள் முதலியவர்களுக்கு முன்னுரிமை யுடன் வீட்டு மனை ஒப்படை வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் நலத்தை ஊக்குவிக்கும் வகையில் தற்போது பொதுவாக இவ்வொப்படைகள் மனைவி/பெண்டிர் பெயரில்தான் செய்யப்படுகின்றன.

3. இத்திட்டமானது அரசு புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் மற்றும் வீடுகள் மூலம் செய்யப்பட்டுள்ள ஆட்சேபமற்ற ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதன் மூலம் செய்யப் படுகிறது. வீட்டுமனைப் பட்டா பெற்ற அனைவருக்கும் சாதி இன வேறுபாடு இன்றி தேசிய வங்கிகளில் ஒப்படை செய்த வீட்டுமனையை அடமானம் வைத்து வீடு கட்டுவதற்குத் தேவையான பணத்தை கடனாகப் பெறுவதற்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

4. ஒவ்வொரு ஆண்டுக்கும் வீட்டுமனை ஒப்படை செய்தலுக்கு குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. 1989-90 ஆம் ஆண்டிற்கு 3 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. பிப்ரவரித் திங்கள் முடிய 3,10,486 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டிற்கு 3.25 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

12 நிலமற்ற ஏழை மக்களுக்கு பயிரிடத்தக்க தரிசு நிலம் ஒப்படை செய்தல் :

பயிரிடத் தக்க தரிசு நிலங்கள் தகுதி வாய்ந்த நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகின்றன. 5 நபர்களோ அல்லது அதற்குக் குறைவாகவோ உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் ''ஏழை'' எனக் கருதப் படுகிறார். அவ்வாறே ஒரு குடும்பத்தில் 5 நபர்களுக்கு மேல் இருப்பின் அக்குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் குடும்பத் தலைவர் ''ஏழை'' என்று கருதப்படுகிறார்.

1990 ஏப்ரல் 19]

2. அரசு நிர்ணயித்துள்ள முன்னுரிமை பட்டியல் வரிசைப்படி தகுதியுள்ள நபர்களுக்கு நில ஒப்படை வழங்கப்படுகின்றன. இப்பட்டியலில் போரில் வீர மரணமடைந்த இராணுவத்தினரின் குடும்பத்தினரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நிலமற்றோரும் முதலிடம் பெறுகின்றனர்.

3. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில், ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து உயரளவு பரப்பு 3 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலம் மட்டுமே ஒப்படை செய்யலாம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த உயரளவு அம்மாவட்டத்தில் நிலங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை என்பதனால், 1 ஏக்கர் புன்செய் அல்லது 0.50 ஏக்கர் நன்செய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4. நிலம் ஒப்படை பெற்ற 3 ஆண்டுகளுக்குள் பயிர் செய்யப்பட வேண்டும் எனவும், 10 ஆண்டு காலத்திற்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது எனவும், நிபந்தனைகளுடன் நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. இருப்பினும், பயிரிடுவதற்கு கடன் வாங்கும் பொருட்டு நிலங்களை வங்கிகளில் அடமானம் வைக்கலாம். ஆனால், நிலத்தை, ஒப்படை பெற்றவரோ, அன்றி அவரது குடும்ப உறுப்பினர்களோ, அன்றி கூலி பெறும் தொழிலாளர்களைக் கொண்டோதான் நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தை பயிரிடக் கூடாது. ஒப்படை நிபந்தனைகள் மீறப்பட்டால் எவ்வித நஷ்டஈடும் கொடுக்காமல் நிலத்தை மீண்டும் அரசு எடுத்துக் கொள்ளலாம்.

5. 1989 ஏப்ரல் திங்கள் முதல் 1990 ஜனவரித் திங்கள் வரை 2,324.52.8 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலங்களுக்கு 5,335 வேளாண்மை நிலப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

6. பொது தேவைகளுக்கு உரிய சமுதாய நிலங்கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் கால்வாய், ஓடை மற்றும் நீர்ப்பரப்பு நிலங்கள் போன்று அனைத்தும் நீர் வழிப் புறம்போக்குகளையும் மாட்டுத் தொழுவம், மந்தைவெளி மற்றும் மேய்க்கால் புறம்போக்குகளையும் ஒப்படை செய்வதிலிருந்து அரசு தடை விதித்துள்ளது.

7. இயற்கைச் சூழல் சமன்பாட்டினை பாதுகாப்பதற்கும் நில அரிப்பினைத் தடுக்கவும் மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேசங்களிலும் வேளாண்மைக்கான நில ஒப்படை செய்வதற்கு அரசு தடை விதித்துள்ளது. மேலும் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அகற்றுவதன் மூலமாகவும் தகுதி

[1990 ஏப்ரல் 19

யான ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்துவதன் மூலமாகவும், இம்மாநிலத்திலுள்ள மலைப்பிரதேசங்களில் இயற்கைச் சூழலின் சமநிலைப்பாட்டினை பாதுகாப்பதற்கான பல்வேறு அணுகுமுறைகள், இன்னபிறவற்றைக் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை தர சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவினையும் அரசு நியமித்துள்ளது.

13. நிலச் சீர்திருத்தம் :

1.1. விவசாய நிலங்கள் சிலரது வசம் குவிந்து அதன் மூலம் விவசாய நில உடமைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளை போக்குவதற்காக 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது. இச்சட்டம் 6 ஏப்ரல் 1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. முதன் முதலில் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 தர ஏக்கரா நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 தர ஏக்கர் வைத்துக் கொள்ளலாம். இருப்பினும் குடும்ப மொத்த உச்சவரம்பு 60 தர ஏக்கருக்கு மேற்படலாகாது. ஆனால் தற்போது 5 அல்லது அதற்கும் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 தர ஏக்கர் என்றும் குடும்பத்தின் மொத்த உச்சவரம்பு 30 தர ஏக்கர் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. உச்சவரம்பிற்கு மேற்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கர் புன்செய் அல்லது 1½ ஏக்கர் நன்செய் என்ற அளவில் விநியோகிக்கப்படுகின்றன. 31 டிசம்பர் 1989 ஆம் நாள் வரையில் நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

(ஏக்கரில்)

(1) மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிகர பரப்பு (ஒப்படை நடவடிக்கைகளுக்கு முன்பும், பின்பும், நீக்கரவு செய்யப்பட்ட பரப்பு நீங்கலாக.)	1,72,984
(2) ஒப்படை நடவடிக்கைக்கு முன்பும், பின்புமாக தடையாணையின் கீழ் உள்ள பரப்பு.	26,657
(3) மிகை நிலமாக அறிவிக்கப்பட்டதில் முடிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் விவரம்.—	
(அ) மிகை நில விநியோக விதிகளின் 13 ஆம் விதியின் கீழ் பொது நலனுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட நிலப் பரப்பு.	9,976

1990 ஏப்ரல் 19]

(ஆ) பயனடைந்தோர் விவரம்:—

பயனடைந்தோர் இனவாரியாக.	நபர்கள்.	ஒப்படை செய்யப் பட்ட பரப்பு.
(1)	(2)	(3)
		(ஏக்கரில்.)
ஆதி திராவிடர்	46,435	51,453
பழங்குடியினர்	93	136
ஏனையோர்	59,167	80,288
மொத்தம் ..	1,05,695	1,31,877

விநியோகிக்கப்பட வேண்டிய பரப்பு—4,474 ஏக்கர்.

2. தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட மிகை நில ஒப்படை பெற்றவருக்கு நிதி உதவி செய்யும் திட்டம்:—

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட மிகை நிலங்களை ஒப்படை பெறுவோருக்கு நிதி உதவி அளிக்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் மைய அரசு செயல்படுத்தத் தொடங்கியது. மிகை நில ஒப்படை பெறுவோர்களில் பெரும் பான்மையோர் ஆதி திராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளர்களாக இருப்பதால், உடனடியாக விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருள்கள் வாங்குவதற்கான நிலைமையில் இல்லாதவர்களாக இருக்கக்கூடும் எனக் கருதப்பட்டது. மேலும் பொதுவாக ஒப்படை செய்யப்படும் நிலங்கள் வெற்று நிலங்களாகவோ மற்றும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையிலோ இருக்கும். இக்காரணங்களால் குறுகிய மற்றும் நீண்டகால நிதி உதவிக்காக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

1979–80 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் நிதி உதவி பெறும் இத்திட்டம் முழுமையான மானியம் கொடுக்கக்கூடிய திட்டமாக மாற்றப்பட்டது. திருத்தப்பட்ட திட்டப்படி அரசு வழங்கும் நிதியுதவி முழுவதும் மானியமாக மாற்றப்பட்டது. வழங்கப்படும் தொகையும் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,000 என

[1990 ஏப்ரல் 19

ஆக்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டு முதல் இத் திட்டம் மைய அரசும் மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. முன்பு கொடுக்கப்பட்ட நிதி உதவியான, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 1,000–1984-85 முதல் ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டது. இந்தத் தொகையில் 80 விழுக்காடு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உரமாகவும், மீதம் 20 விழுக்காடு ரொக்க மாகவும் அளிக்கப்படுகிறது. இத் திட்டத்திற்குள்ளேயே தாழ்த் தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்குவதற்கு தனியாக வகை செய்யப்பட்டுள்ளது.

நிதி தேவைகள் குறித்த விளக்கங்கள் :

1989–90 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இதுவரை எய்திய திட்ட இலக்கு :

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 24,00,000/-, 31 மார்ச் 1990 முடிய செலவிடப்பட்டது.

3. இலக்கு :

1989–90 ஆம் நிதி ஆண்டிற்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழான மிகை நிலங்கள் ஒப்படைக்கு குறியீடாக 5,000.00 ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இவற்றில் வடபாதி மங்கலம் தமிழ்நாடு சர்க்கரை கழகத்திட மிருந்து பெறப்பட்ட 365 ஏக்கர் நிலங்களும் இதில் அடங்கும். இக்குறியீட்டில் 31 மார்ச் 1990 வரை அடைந்த முன்னேற்றம் வருமாறு :—

பயனடைந்தவர்களின் விவரம்.	பயன் அடைந்தோர் எண்ணிக்கை.	பரப் பளவு (ஏக்கரில்).
(1)	(2)	(3)
ஆதிதிராவிட இனத்தவர்	5,926	4,522
பழங்குடியினர்	4	12
மற்றவர்கள்	2,487	2,266
மொத்தம் ..	8,417	6,800

1990 ஏப்ரல் 19]

1984–85ஆம் ஆண்டிலிருந்து 1988–89ஆம் ஆண்டு வரையிலான கால்த்திற்கு பயன்டைந்தவர்களின் விவரம் :—

பயன்டைந் தோர் விவரம்.	1984–85	1985–86	1986–87	1987–88	1988–89
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆதிதிராவிட இனத்தவர்.	1,761	1,428	982	1,152	1,904
பழங்குடியினர்	..	2	7	..	9
மற்றவர்கள்	1,403	1,190	1,009	1,635	1,334
மொத்தம்	3,164	2,620	1,998	2,787	3,247

4. 1990–91 ஆம் ஆண்டிற்கான இலக்கும் திட்டமும் :

இந்த நிதி ஆண்டில் மைய அரசின் உதவியால் நடத்தப்படும் திட்டத்திற்கு ரூ. 24 இலட்ச ரூபாயும் இதில் அடங்கியுள்ள சிறப்பு உள்ளடக்கத் திட்டத்திற்கு ரூ. 4.80 இலட்ச ரூபாயும் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1990–91 நிதி ஆண்டில் தகுதியான நபர்களுக்கு ஒப்படை செய்வதற்கான 2,400.00 ஏக்கர் நிலம் குறியீடாக நிர்ணயம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

11. குடிவாரச் சட்டங்கள்.

1. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 :

இந்தச் சட்டத்தின்படி எந்த ஒரு பயிரிடும் குத்தகைதாரரும், குத்தகைப் பணத்தைச் சரிவர செலுத்தாதபோதும் அல்லது நிலத்திற்கோ மற்றும் அதிலுள்ள பயிர்களுக்கோ, சேதம் விளைவிக்கின்ற செயல்களைச் செய்தாலும் நிலத்தை சாகுபடி செய்யாமல் இருந்தாலும், விவசாயமற்ற மற்ற காரியங்களுக்கு நிலத்தைப் பயன்படுத்தினாலும், நில உரிமையாளருக்கு நிலத்தில் உரிமைய எந்த ஒரு பட்சத்திலும் மறுக்கும் வகையில் செயல் புரிந்தாலும், தவிர நிலத்திலிருந்து வெளியேற்றப்பட இயலாது. ஆயுதப்படையினரைத் தவிர வேறு எந்த நில உடைமையாளரும்

மேலே குறிப்பிட்ட காரணங்களினின்றி மற்ற காரணங்களுக்காக குத்தகைதாரரிடமிருந்து நிலத்தை மீளப் பெற முடியாது. நில உரிமையாளர்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் ஏற்படக்கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க வருவாய் நீதிமன்றங்கள் உள்ளன.

2. தமிழ்நாடு பயிரிடும், குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 :

இச்சட்டத்தின்படி குத்தகைதாரர்களால் நிலச் சொந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய குத்தகைத் தொகையானது தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் அல்லது பொது பொறுப்புக் கழகங்களாக இருந்தாலும் ஆண்டொன்றில் மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு ஆகும். அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் நிலத்தின் மீதான இதர இனங்களை நிலத்தின் உரிமையாளர் செலுத்துவார். ஆனால், விவசாயத்திற்கான செலவு முழுவதையும் பயிரிடும் குத்தகைதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இது பற்றிய வழக்குகளும் வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்படும்.

3. 1961ஆம் ஆண்டைய தமிழ்நாடு, பொது நிறுவனங்கள் (வேளாண்மை நிலங்களின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 57/61 :

தமிழ்நாடு பொதுப் பொறுப்புக் கழகங்கள் வைத்துள்ள விவசாய நிலங்களின் நிருவாகத்தை முறைப்படுத்துவதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

எந்த ஒரு பொதுப் பொறுப்புக் கழகமும் தன்னுடையச் சொந்த சாகுபடிக்கு 20 தர ஏக்கர் வரை நிலத்தினை வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேலுள்ள நிலத்தினை, உண்மையிலேயே பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகைக்கு விட வேண்டும்.

4. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம், 1969:

தமிழ்நாட்டில் நிலச் சொந்தக்காரர்களிடம் அல்லது பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் உள்ள விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்கள், தங்களது பெயரினை பதிவு செய்வதற்காக இச்சட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி வட்டாட்சியர், இதற்கான பதிவுருக்களை வைத்துக்கொள்ளக்கூடிய அலுவலராவார். அவர் பயிரிடும் குத்தகைதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக குத்தகை உரிமைப் பதிவுருக்களை பராமரிக்க வேண்டும். இச்சட்டப் பிரிவு 4-ஏ இன்படி பதிவு அலுவலர் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து குத்தகை

1990 ஏப்ரல் 19]

தாரர்களைப் பதிவு செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் பிரிவு 5(ஏ)ன்படி வட்டாட்சியருக்கு உதவி புரிவதற் காக அலுவல் சார்பற்ற குழு ஒன்று அமைக்க வகை செய்யப் பட்டுள்ளது. இந்தக் குழுவில் நிலமற்ற ஆதிதிராவிட வகுப் பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவரும் மற்றும் சமூகநல ஊழியர் மூவரும் உறுப்பினர்களாக இருப்பர். இந்தக் குழு தற்சமயம் 57 வட்டங்களில் இயங்குகிறது. கடந்த 31, டிசம்பர் 1989 வரை தமிழகத்தில் 4,94,008 நபர்கள் பயிரிடும் குத்தகைதாரர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வசமுள்ள நிலம் 6,84,496 ஏக்கர்களாகும். அவற் றின் விவரம் வருமாறு :—

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1. ஆதிதிராவிடர்	1,74,651
2. பழங்குடியினர்	718
3. பிற்படுத்தப்பட்டோர்	1,64,653
4. மற்றவர்கள்	1,53,986
மொத்தம் ..	4,94,008

4. அ. தமிழ்நாடு பயிரிடு குத்தகைதார்கள் (நில வெளியேற்றுகையி லிருந்து பாதுகாப்பு) சட்டம், 1989, (தமிழ்நாடு சட்டம், 41-89.)

1989ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடு குத்தகைதார்கள் (நில வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டம் என்ற சட்டமானது பயிரிடு குத்தகைதார் குத்தகை தொகையினை செலுத்தாது நிலுவை வைத்திருக்கிறார் என்ற ஒரே காரணத் திற்காக அவர் வெளியேற்றப்படுதலிலிருந்து 1990-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை பாதுகாப்பளிக்கிறது, மேலும் 1986ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ, இந்தச் சட்டம் தமிழ்நாடு அரசி தழில் வெளியிடப்பட்ட நாளான 1989ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ஆம் நாளுக்கு முன்னரோ குத்தகைப் பாக்கிக்காக நிலம் எதிலிருந்தேனும் வெளியேற்றப்பட்ட பயிரிடு குத்தகை தாரர் எவரும், தஞ்சாவூர், மயிலாடுதுறை, மதுரை, சேலம், கடலூர் ஆகிய வருவாய் நீதிமன்றங்களில் தொடர்புடைய

வருவாய் நீதிமன்றத்திடம் உடனே மனு செய்துக்கொண்டு இத் தகைய நிலத்தினை மீட்டுக்கொள்ளலாம். இச்சட்டம் 1990ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை அமுலிலிருக்கும்.

5. தமிழ்நாடு உழவுத் தொழிலாளர்கள் (நியாய ஊதியங்கள் சட்டம், 1969) :

இச் சட்டம், தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்கும், அதுபற்றி விசாரித்து ஆவன செய்வதற்கும் இயற்றப்பட்டுள்ளது, இச் சட்டம் நெல் பயிரிடும் நிலங்களுக்கு மட்டும் பொருந்தும். கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட 11 வட்டங்களில் மட்டும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(1) மன்னார்குடி.
(2) திருத்துறைப்பூண்டி.
(3) மயிலாடுதுறை.
(4) சீர்காழி.
(5) நன்னிலம்.
(6) நாகப்பட்டினம்.
(7) திருவாரூர்.
(8) வேதாரண்யம்.
(9) நீடாமங்கலம்.
(10) தரங்கம்பாடி.
(11) குடவாசல்.

தற்போது கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உழவுத் தொழிலாளர்களுக்கு. அரசு ஆணை பல்வகை எண் 468, நாள் 3, ஏப்ரல் 1989ன்படி வழங்கத்தக்க விவரம் வருமாறு.

1. உரிய வயது வந்தோர்:

(அ) உழுதல், விதைத்தல், செப்பனிடுதல், நிலங்களையும், வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும் நிலத்தை தயார் செய்தல், இடுபொருட்களையும் விளைச்சல் பொருட்களையும் தலைச்சுமையாக எடுத்துச் செல்லல்.	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 6.90 அல்லது ரூ. 16.00 நாளொன்றுக்கு.

1990 ஏப்ரல் 19]

(ஆ) நாற்றுப்பிடுங்குதல் மற்றும் நடுதல்.	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 5.90 அல்லது நாளொன்றுக்கு ரூ. 15.00 வீதம்.
(இ) களையெடுத்தல்	7 லிட்டர் நெல்லுடன் ரூ. 4.90 அல்லது நாளொன்றுக்கு ரூ. 14.00 வீதம்.

(ஈ) உரிய வயதடையாதவர்கள் :

அனைத்துவகை வேளாண்மைத் தொழில்களுக்கும்.	4 லிட்டர் நெல்லுடன் ரூ. 2.80 அல்லது நாளொன்றுக்கு ரூ. 8.00 வீதம்.

உழுதல் தவிர ஏனைய வேளாண்மைப் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழவுக்கு மட்டும் தான் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும்.

6. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம், 1971 :

இச்சட்டம் குடியிருப்புகள் அனுபோகதாரர்களுக்கு உடைமை உரிமை அளிக்கிறது. அதன்படி 19, ஜூன் 1971 அன்று குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் குடியிருப்பு மனையை அனுபோகத்தில் வைத்திருந்த உழவர் ஒருவர் அல்லது உழவுத் தொழிலாளர் ஒருவர் இச்சட்டம் செயலுக்கு வந்த நாளிலிருந்து உரிமையாளராக இருப்பார், அக்குடியிருப்பு வில்லங்கம் எதுவுமின்றி அவரிடமே நிலைபெற்று இருக்கும்.

31. டிசம்பர் 1989 வரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் விவரம் பின்வருமாறு :

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஆதிதிராவிடர்	99,010
பழங்குடியினர்	244
பிற்பட்டோர்	48,938
ஏனையோர்	32,025
மொத்தம் ...	1,80,217

[1990 ஏப்ரல் 19

858 இனங்கள் விசாரணையில் உள்ளவை; 128 வழக்குகள் நீதி மன்ற விசாரணையில் உள்ளன.

7. தமிழ்நாடு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம், 1976 (சட்டம் 38/1976) :

குத்தகைதாரர் அல்லது உரிமைதாரர் என்ற முறையில் 1, சூலை 1975 அன்று தமிழ்நாட்டில் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள கிராமப்புறக் கைவினைஞர்களுக்கு உடைமை உரிமை வழங்க இச்சட்டம் வகை செய்கிறது,

31, டிசம்பர் 1989ஆம் நாள் வரையிலும் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் பின்வருமாறு :

இனம்.	நபர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
ஆதிதிராவிடர்	43
பழங்குடியினர்	15
பிற்பட்டோர்	227
ஏனையோர்	122
மொத்தம் ...	407

405 இனங்கள் நிலுவையில் உள்ளன.

14. நகர்ப்புற நில உச்சவரம்பு :

1. கிராமப் புறங்களிலிருந்து பெருமளவில் மக்கள் வெளியேறி வேலை மற்றும் இதர வசதிகளைத் தேடி நகர்ப்புற பகுதிகளுக்கு வந்துள்ளதால், நகர்ப்புற பகுதிகளில் உள்ள நிலங்களுக்குத் தேவை அதிகமாக உள்ளது. எனவே அரிதாகக் கிடைக்கும் நகர்ப்புறப் பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைபடுத்தி, முறையாக மேம்படுத்துவது, ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனை அதிக விலைக்கு விற்பது போன்றவற்றைத் தடுக்கும்பொருட்டு, தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்புற நிலங்களை சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்ய வேண்டும் என்றும் கருதப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1976 (குடியரசு தலைவர் சட்டம், 34/1976) இயற்றப்பட்டது, அச்சட்டம் 3, ஆகஸ்ட் 1976 முதல் அமுலாக்கப்பட்டது.

1990 ஏப்ரல் 19]

2. இச்சட்டத்தின் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு :

(1) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு சங்கம் வைத்திருக்கின்ற வெற்று நிலத்தின் மீது உச்ச வரம்பு விதித்தல்.

(2) எதிர்காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல்.

(3) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்துதல் ஆகியவையாகும்.

3. இச்சட்டத்தைச் செயலாக்குவதில், பொது மக்கள் அடைந்த இடர்பாடுகள் குறித்து, எண்ணற்ற முறையீடுகளும், பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இவற்றைக் கருத்தில் கொண்டு குடியரசுத் தலைவரின் 1976 ஆம் ஆண்டு 34 ஆம் சட்டத்தை ரத்து செய்து, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது.

4. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 3, ஆகஸ்ட் 1976 முதல் முன் தேதியிட்டு அமுலுக்கு வந்தது.

5. இச்சட்டம் பின்வரும் நகர் கூட்டுப்பகுதிகளில் செயலில் உள்ளது. நகர் கூட்டுப் பகுதிகளின் பெயர் :—

(1) சென்னை.

(2) மதுரை.

(3) கோயம்புத்தூர்.

(4) திருச்சிராப்பள்ளி.

(5) சேலம்.

(6) திருநெல்வேலி.

[1990 ஏப்ரல் 19

6. கீழே குறிப்பிட்டுள்ள நகர் கூட்டுப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பின் விவரம் வருமாறு :—

தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 24/1978) :

நகர கூட்டுப்பகுதி.	வகைப் பாடு.	தனிப்பட்ட ஒருவர்.	ஒரு குடும்பம்.	தொழில் நிறுவனம்.
(1)	(2)	(3)	(4)	(5)
		(சதுர மீட்டரில்)		
சென்னை ..	I	500	2,000	2,000
மதுரை கோயம்புத்தூர். திருச்சிராப்பள்ளி. சேலம்	II	1,500	3,000	3,000
திருநெல்வேலி	III	2,000	4,000	4,000

7. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்சவரம்புக்கு மிகையாக வெற்று நிலம் வைத்துள்ள நபர் எவரும் அவ்வாறு மிகையாக வைத்துள்ள நிலம் குறித்த விவர அறிக்கை ஒன்றை மேற்படி சட்டப்பிரிவு 7(1) இன் கீழ் அப்பகுதியின் மீது அதிகார வரம்பினைக் கொண்டுள்ள தகுதி பெற்ற அலுவலரிடம் தாக்கல் செய்ய வேண்டும். தகுதி பெற்ற அலுவலர் அதனை பரிசீலனை செய்து சட்டப்பிரிவு 9-11ன் கீழ் நடவடிக்கை எடுத்து, அறிக்கை தாக்கல் செய்த மனுதாரரிடம் உள்ள மிகை வெற்று நிலத்தைக் கணக்கிட்டு அதனைக் கையகப்படுத்துவோர்க்கு தகுதிபெற்று அலுவலரின் உத்தரவினால் அவர் பாதிக்கப்பட்டிருந்தால் அவர் சிறப்பு ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையருக்கு சட்டப்பிரிவு 33-ன் கீழ் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யலாம். அம்மேல் முறையீட்டில் நிலச் சீர்திருத்த ஆணையரின் முடிவு இறுதியானதாகும்.

1990 ஏப்ரல் 19]

8. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியன வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதிமுறைகள் பொருந்தாது:

9. தனி நபரோ, நிலையங்களோ அல்லது தொழில் நிறுவனங்களோ அவர்களிடமுள்ள மிகை வெற்று நிலங்களை பொதுக் காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதாக இருந்தால் அவர்கள் சட்டப்பிரிவு 21(1)(எ)-இன் கீழ் விலக்குக் கோரலாம், அதே போல் தனி நபருக்கு ஏற்படுகின்ற எதிர்பாராத இடர்களின் அடிப்படையிலும், அரசு சட்டப்பிரிவு 21(1)(பி)இன் கீழ் விலக்களிக்கிறது.

10. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட மிகையான வெற்று நிலங்கள், பிரிவு 24 மற்றும் விதிமுறை 23-இன் கீழ் எந்த ஒரு நபருக்கும் தொழில் நோக்கத்திற்காகவோ அல்லது தொழிற்சாலையில் வேலை பார்ப்போருக்கு வீடு கட்டும் பொருட்டோ அரசு ஒதுக்கீடு செய்யலாம். அரசு கீழ்க்கண்ட முதன்மை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது :—

(1) மாநில அரசுத் துறைகள்.

(2) மாநில அரசின் கீழ் உள்ள நகராட்சி மன்றங்கள், மாநகராட்சிகள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(3) மத்திய அரசுத் துறைகள்.

(4) மத்திய அரசின் கீழ் உள்ள கூட்டு நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள்.

(5) வீட்டு வசதி நிறுவனங்கள்.

(6) தொழிற்சாலைகள்.

(7) தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு வீடு கட்டுவதற்கு.

(8) பிற நிறுவனங்கள், நிலையங்கள்.

(9) தனியார்.

11. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களில், 31, சனவரி 1990 வரை 158 ஹெக்டேர், 08 ஏர்., 24 சதுர மீட்டர் நிலத்தை அரசுத் துறைகள், அரசுக்

[1990 ஏப்ரல் 19

கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள், ஆகிய வற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 446 ஹெக்டேர், 79 ஏர், 97 சதுர மீட்டர் நிலங்கள் ஒதுக்கீடு செய்வதற்கு தயார் நிலையில் உள்ளன.

12. மிகை வெற்று நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1989–90-க்கு ரூ. 4,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீட்டில் ரூ. 3,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 31, சனவரி 1990 வரை ரூ. 2,72,118 செலவழிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசால் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் வசூலிக்கப்படும்.

15. நகர்ப்புற நிலவரிச் சட்டம் :

தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், சென்னை நகரில் 1966-ஆம் ஆண்டு முதலும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் 1971-ஆம் ஆண்டு முதலும், சென்னைப் புறநகர்ப்பகுதிகளில் 1975-ஆம் ஆண்டு முதலும், திருநெல்வேலி நகருக்கும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை நகர்களில் நீட்டிக்கப்பட்ட பகுதிகட்கும் 1981ஆம் ஆண்டு முதலும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் பொது வழிபாட்டிற்கு உப யோகப்படும் நிலங்கள், மத்திய மாநில அரசுகளால் நிதி உதவி பெறும் மருத்துவ மனைகள், இறந்தவர்களை எரி யூட்டும் மற்றும் புதைக்குமிடங்கள், பொதுமக்கள் உப யோகிக்கும் பாதை மற்றும் பொதுமக்கள் உபயோகப்படுத்தும் நிலங்கள் மாநில அரசால் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பூங்கா, நூலகம் மற்றும் அருங்காட்சியகம், முதியோர் மற்றும் கால்நடைப் பராமரிப்பு இல்லம், காதுகேளாதோர் மற்றும் ஊமைகளுக் கான பள்ளி உள்ள நிலங்களுக்கு தன்னியல்பு வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

தர்ம ஸ்தாபனம் மற்றும் பொது அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் இடர்ப்பாடு இருப்பின் அரசு பிரிவு 27(1)-ன் கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கிறது.

1975-ல் நகர்ப்புற நிலவரி அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து பல முறையீடுகள் பொதுமக்களிடமிருந்து செய்யப்பட்டதன் பேரில், அரசாணை எண் 2625, வருவாய்த்துறை, நாள் 27–12–1976 இல் அரசு பல சலுகைகளை அளித்தது.

1990 ஏப்ரல் 19]

அதன்படி 1–7–1971 ஆம் தேதி சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படும் விவரம் கீழ் வருமாறு:—

சென்னை புறநகர்ப்பகுதி தவிர ஏனைய நகர்ப்புறங் களில் உள்ள நிலங்கள்.		சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள்.	
(1)		(2)	
1. முதல் இரண்டு மனைகள்.	வரி இல்லை.	1. முதல் மூன்று மனைகள்.	வரி இல்லை.
2. இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள்.	சந்தை மதிப்பில் 0.7%	2. மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள்.	சந்தை மதிப்பில் 0.7%
3. ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள்.	1%	3. ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள்.	1%
4. பத்துமனைக்கு மேல் இருபது மனைக்குள்.	1.5%	4. பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள்.	1.5%
5. இருபது மனைக்கு மேல்.	2%	5. இருபது மனைக்கு மேல்.	2%

மேலும், சிறுதொழில் சான்றிதழ் பெற்றுள்ள தொழில் கூடங்களுக்கு 25 சத வீதம் வரிச் சலுகையும், ஏனைய தொழிற் கூடங்களுக்கு 10 சத வீதம் வரிச்சலுகையும், சங்கீத நாடக சபாக்கள் மற்றும் சொந்தக்காரர் குடியிருப்புகளுக்கு 50 சத வீதம் வரிச் சலுகையும், திரையரங்குகளுக்கு 10 சத வீதம் வரிச் சலுகையும், 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்பு சட்டத்தின் பிரிவு 3(பி)-ன் கீழ் குடிசைக் குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரியிலிருந்து விலக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம் 11–1–1985 ஆம் தேதிய தீர்ப்பில் நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் பிரிவு 6-பி செல்லத் தக்கதல்ல என்று தீர்ப்பளித்ததால் ஒருங்கிணைந்து விதிக்கும் நகர்ப்புற நில வரிக்குப் பதிலாக புல எண் வாரியாக தனித் தனியாக சென்னை புறநகர்ப்பகுதியில் மூன்று மனைகளுக்கு மேலும், மற்ற நகர்ப்புறங்களில் இரண்டு மனைகளுக்கு மேலும்

[1990 ஏப்ரல் 19

உள்ள நிலங்களுக்கு தனித் தனியாக வரிவிதிக்கப்பட வேண்டுமென அரசாணை எண் 1165, வருவாய்த் துறை, நாள், 27–7–1987ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி தற்காலிக வரிவிதிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

31–1–1990 வரை தற்காலிக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ள இனங்களின் விபரம் பின்வருமாறு :—

சட்டம்.	மொத்த இனங்கள்.	வரிவிதிப்புத் தொகை (1 பசலி ஆண்டுக்கு.)
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1971	38,744	104.00
1972	17,122	52.47
1975	31,362	157.16

16. வேளாண்மை வருமான வரி :

தமிழ் நாட்டில் வேளாண்மை வருமான வரி 1955-ம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. காப்பி, தேயிலை, ரப்பர், ஏலக்காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே முதற்கண் வேளாண்மை வருமான வரி விதிக்கப் பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்த சட்டத்தின் மூலம் இம் மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டப் பயிர் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வருமான வரி விதிப்பதற்கும் வகை செய்கிறது. முந்தைய ஆண்டின் மொத்த வேளாண்மை வருமானத்தின் அடிப்படையிலோ அல்லது வைத்திருக்கும் நிலப் பரப்பை அடிப்படையாகக் கொண்டோ ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகிறது. தற்போது வரி விலக்கு வரம்பு ரூ. 10,000 ஆகும். இணக்க முறை அடிப்படையில் வரி விலக்கு வரம்பு 20 தர ஏக்கராகும். மலைத் தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரை 100 தர ஏக்கர்கள் வரை இணக்கம் செய்து கொள்ளும் வசதி உள்ளது. ஆனால் மலைத் தோட்டப் பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதுமில்லை. பயிரிடப்படும் பயிர்களின் தரத்தைப் பொறுத்து தர ஏக்கர் கணக்கிடப்படுகிறது.

1990 ஏப்ரல் 19]

2. வருமானத்தின் அடிப்படையிலும் மற்றும் இணக்கமுறை அடிப்படையிலும் விதிக்கப்படும் தற்போதைய வீதங்கள் வருமாறு :—

வருமான வரி அடிப்படையிலான வரி வீதங்கள்:

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூ. 8,000-க்கு.	வரி கிடையாது.
2. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 7,000-க்கு.	ஒரு ரூபாயில் 25 காசு.
3. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு.	ஒரு ரூபாயில் 30 காசு.
4. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு.	ஒரு ரூபாயில் 35 காசு.
5. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு.	ஒரு ரூபாயில் 45 காசு.
6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 20,000-க்கு.	ஒரு ரூபாயில் 55 காசு.
7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 50,000-க்கு.	ஒரு ரூபாயில் 60 காசு.
8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு.	ஒரு ரூபாயில் 65 காசு.

ஆனால்,

(1) ரூ. 10,000-க்கு மேற்படாத வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்தப்பட வேண்டியதில்லை.

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாதபொழுது அது குறித்து செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ, அத்தொகையில் எழுபது விழுக்காட்டிற்கு மேற்படக்கூடாது.

(3) மேலும் ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்த வரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும் உயரளவு வீதத்தில் வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட வேண்டும்.

[1990 ஏப்ரல் 19

நிலவரம்பின் அடிப்படையிலான இணக்க வரி விதங்கள்:

நிலப்பரப்பு.	தர ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம்.
(1)	(2)
	ரூ. பை.
1. முதல் 20 தர ஏக்கருக்கு	வரி கிடையாது.
2. அடுத்த 5 தர ஏக்கருக்கு	15.00
3. அடுத்த 5 தர ஏக்கருக்கு	20.00
4. அடுத்த 5 தர ஏக்கருக்கு	30.00
5. அடுத்த 5 தர ஏக்கருக்கு	40.00
6. அடுத்த 10 தர ஏக்கருக்கு	50.00
7. அடுத்த 10 தர ஏக்கருக்கு	60.00
8. அடுத்த 10 தர ஏக்கருக்கு	70.00
9. அடுத்த 10 தர ஏக்கருக்கு	80.00
10. எஞ்சிய தர ஏக்கருக்கு	100.00

3. ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க ஒட்டு மொத்த தொகை மொத்த நிலப்பரப்பு முழுவதற்கும் உயர்ந்தளவு வீதத்தில் விதிக்கப்படும். இதனை பொறுத்த மட்டில் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்வதற்கு கம்பெனி அனுமதிக்கப்படுகிறது.

4. வேளாண்மை வருமான வரியில் பெருமளவு வருவாய் மலைத் தோட்டப் பயிரிலிருந்து கிடைக்கின்றது. தற்பொழுது மொத்த வருவாயில் 90 விழுக்காட்டிற்கு மேல் மலைத் தோட்டப் பயிரிலிருந்து கிடைக்கின்றது. 1981–82 முதல்

1990 ஏப்ரல் 19]

1989–90 வரையிலான வரி விதிப்பு ஆண்டுகளில் வருமானத்தின் அடிப்படையிலும் இணக்க முறையின் கீழும் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு.	மலைத் தோட்டப் பகுதி.		
	வருவாய் அடிப்படை.	இணைக்க முறை.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1981—82 ..	1,020	3,550	4,570
1982—83 ..	1,000	3,660	4,660
1983—84 ..	920	3,714	4,634
1984—85 ..	913	3,705	4,618
1985—86 ..	878	3,798	4,676
1986—87 ..	827	3,831	4,658
1987—88 ..	791	3,899	4,690
1988—89 ..	768	3,916	4,684
1989—90 (31—10—89 முடிய).	775	3,940	4,715

ஆண்டு.	மலைத்தோட்டமல்லாத பகுதி.		
	வருவாய் அடிப்படை.	இணைக்க முறை.	மொத்தம்.
(1)	(5)	(6)	(7)
1981—82 ..	3,992	28,621	32,613
1982—83 ...	3,901	26,360	30,261
1983—84 ..	3,814	26,216	30,030
1984—85 ..	3,736	23,824	27,560

[1990 ஏப்ரல் 19

(1)		(5)	(6)	(7)
1985—86	..	3,678	24,758	28,436
1986—87	..	3,644	25,777	29,421
1987—88	..	3,526	24,935	28,461
1988—89	..	3,297	24,110	27.407
1989—90 (31—10—89 முடிய).	..	3,302	23,810	27,112

5. இத்துறையில் புதியதாக வந்த அனைத்து வேளாண்மை வருமான வரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வருமான வரி அலுவலர்களுக்கும் விரிவான பயிற்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருமான வரி தொடர்பான பல்வேறு சட்டங்கள், கணக்குகள் குறித்து ஒன்பது நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் பங்கு கொள்வோர்க்கு பல்வேறு தொழில்களில் வல்லுநத்துவம் பெற்ற வல்லுநர்கள் பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும் வேளாண்மை வருமான வரி அலுவலர்களுக்கும் நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப் படுகின்றன. வேளாண்மை வருமான வரி விதிப்பு ஆணைகள் தொடர்பாக முடிவு காண்பதில் இப்பயிற்சி அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

17. மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம்:

இம்மாநிலத்தில் மரத்திற்கான பட்டா வழங்கும் திட்டம் பல்லாண்டுகளாக செயலிலுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கில் உள்ள மரங்களின் இலைகள் மற்றும் கனிகளை பயன்படுத்துவதற்குரிய உரிமம் மட்டும் அண்டை நிலச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகிறது. மரம் மற்றும் நிலத்தின் மீதுள்ள உரிமை அரசிடம் இணைந்து இருக்கும்.

2. இந்நாட்டில் முழுமைக்கும் தேவைப்படும் எரிபொருள், விறகு மற்றும் கால்நடை தீவனம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு பெரும் அளவிற்கான காடு வளர்ப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசு புதிய சமூக மர வளர்ச்சித் திட்டத்தை தயாரித்து உள்ளது. அத்திட்டம் 1987 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

1990 ஏப்ரல் 19]

3. புதிய சமூக மர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் [அரசாணை (பல்வகை) 1613, வருவாய்த் துறை, நாள் 23–10–1987] வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஊராக நிலமற்ற ஏழைப் பெண்டிர் வட்ட அளவிலான குழுவினால் தெரிவு செய்யப் பட்டு பலன் பெற இயலும், அரசு மற்றும் ஊராட்சி நிலங் களில் மரம் வளர்ப்பதற்கு அவர்கட்கு மரம் நடுவதற்கான உரிமம் வழங்கப்படும். உரிமம் வழங்கப்பட்ட இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும். இரண்டு ஆண்டுகட்குப்பின் மரம் இருப்பதை சரி பார்க்கப் பட்டு இவ்வுரிமைதாரர்கட்கு மரப்பட்டா வழங்கப்படும்.

18. வெள்ளம், 1989:

1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் தென்மேற்கு பருவக் காற்று மிகவும் வலுப்பெற்றது. இப்பருவ காற்று 22–7–1989 மற்றும் 23–7–1989 ஆகிய இரண்டு நாட் களில் தீவிரமடைந்து நீலகிரி மாவட்டத்தில் 211.05 மி.மீ. அளவிற்கு மிக பலத்த மழை பெய்துள்ளது. இம்மாவட்டத்தின் மாத சாதாரண மழையளவு 378.90 மி. மீட்டர் ஆகும். பலத்த சூறாவளிக் காற்றினாலும், பெய்த இடி மழையினாலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதனால் சாலை அரிப்பு ஏற்பட்டு மரங்கள் வேரோடு சாய்ந்து மலைப்பாதை மற்றும் நெடுஞ்சாலைகளில் வண்டிகளின் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இதனால் தொலைபேசி கம்பங்களும், மின்சாரக் கம்பிகளும் கூட பாதிக்கப்பட்டன. இதனால் தொலைபேசி மற்றும் மின்சாரம் வழங்குவது துண்டிக்கப்பட்டது. மின்சார பாதிப்பினால் குடி நீர் வசதியும் தடைப்பட்டது. மேலும், இருப்புப் பாதைகளில் மரங்கள் பெயர்ந்து விழுந்ததினால் இரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. பல குடும்பங்களின் வீடுகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதினால், பலர் வீடிழந்து நின்றனர். மேலும் மின்சாரத்தினாலும், வெள்ளத்தினாலும் மரங்கள் விழுந்ததினாலும் ஆறு பேர் உயிரிழந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் நிவாரணப் பணிக்கான மத்திய அரசு ரூ. 68.61 இலட்சம் உச்சவரம்புத் தொகையாக வழங்கியுள்ளது. 1–10–1989 முதல் 31–12–1989 வரையுள்ள நாட்களில் பெய்த மழையினால் பல்வேறு மாவட்டங்களில் இருபது பேர்கள் உயிரிழந்தனர். மேலும், 11,786 குடும்பங்கள் இந்த மழையி னால் பாதிக்கப்பட்டனர். மொத்தம் 3,618 குடிசைகள் பகுதி யாகவும், 8,389 குடிசைகள் முழுமையாகவும் பாதிக்கப்பட்டது. இவ்வாறு வீடிழந்தவர்களுக்கு உணவு வழங்குவதற்காக ரூ. 2,18,800 செலவிடப்பட்டது. மேலும் பலத்த மழையினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 15,11,800 சென்னை, செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, காமராசர், சிதம்பரனார், பெரியார், திருநெல்வேலி–கட்ட

பொம்மன், நீலகிரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது. இந்தப் பருவ மழையினால் தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் 1,200 ஹெக்டேர் நிலத்தில் பயிரிடப்பட்ட பயிர்கள் வெள்ள நீரில் மூழ்கி பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை நிகழாத அளவில் காமராசர், பசும்பொன் தேவர் திருமகன், இராமநாதபுரம், சிதம்பரனார், மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத் ஆகிய தென் மாவட்டங்களில் சனவரி 1990-ல் ஏற்பட்ட கனத்த மழையால் உயிர் மற்றும் கால்நடை சேதம் மற்றும் தனியார் மற்றும் பொது உடமைக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது. 29 பேர் உயிரிழந்தனர். 1,213 கிராமங்களும், 4.68 இலட்சம் மக்களும் பாதிக்கப்பட்டனர். 11,653 வீடுகள் முழுமையாகவும், 25,741 வீடுகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன. 20,131 ஹெக்டேர் நிலத்தில் பயிர்கள் சேதமடைந்தன. இராம நாதபுரம் மாவட்டம் கமுதி வட்டத்தில் வெள்ளத்தால், சூழப் பட்ட மக்கள் கடற்படை ஹெலிகாப்டர்களில் மீட்கப்பட்டனர். அரசு ரூ. 50 இலட்சம் உடனடியாக நிவாரணப் பணிக்கு வழங்கி யது. மேலும் இது குறித்து மத்திய அரசுக்கு உதவி கோரி ரூ. 19.80 கோடிக்கான பிரேரணை அனுப்பியுள்ளது.

ஐந்து பேர்கள் அடங்கிய மத்திய நிபுணர் குழு தென் மாவட் டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை 12–3–90 அன்று பார்வையிட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவி எதிர் பார்க்கப்படுகிறது.

19. வறட்சி நிவாரணத் திட்டம், 1989:

தமிழ்நாட்டில் மொத்தம் ஓர் ஆண்டிற்கான மழை அளவில் வடகிழக்கு பருவக் காற்றினால் 48 விழுக்காடு பெறப்படுகிறது எனும் நிலை 1988-இல் பெரிதும் பொய்க்கப்பெற்று (—) 43 விழுக்காடு மட்டுமே மழை பெய்வது 1989 ஆம் ஆண்டின் துவக் கத்தில் கடுமையான வறட்சியைத் தமிழ்நாடு எதிர்நோக்கியது. இந்நிலை குறித்து பிப்ரவரி 1989-ல் மாவட்டாட்சியர்களுடன் முதற்கட்டமாக கலந்தாய்வு செய்து குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க 1–4–1989 அன்று 5,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ரூ. 12.50 இலட்சங்களும் மற்றும் இதர குடிநீர் திட்டப் பணி களுக்காக ரூ. 1,057.27 இலட்சமும் அரசால் முதற்கட்டமாக அனுமதித்து ஆணையிடப்பட்டது.

2. 6-5-1989 அன்று ரூ. 222 கோடிக்கு நிவாரண நிதி உதவி அளிக்கக் கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. மேற்படி அறிக்கையினை ஆதாரமாகக் கொண்டு 1989 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் நாள் முதல் 13 ஆம் நாள் வரை மத்திய அரசின் நிபுணர் குழு வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட் டங்களைப் பார்வையிட்டது. நிபுணர் குழுவின் பரிந்துரை

1990 ஏப்ரல் 19]

களைப் பரிசீலித்த மத்திய அரசு ஜூன் 1989-ல் ரூ. 38.05 கோடியை அனுமதித்து, அதில் 70 விழுக்காட்டினை கடனாகவும், 30 விழுக்காட்டினை மான்யமாகவும் வழங்கி போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு 31-10-1989-க்குள் எல்லா நிவாரணப் பணிகளையும் முடிக்க ஆணையிட்டது.

3. வறட்சியினால் வேலையின்றித் தவித்த விவசாயக் கூலித் தொழிலாளர்களிடையே வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும் பொருட்டு அரசு அவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பினை உருவாக்க ரூ. 500 இலட்சங்கள் அனுமதி அளித்தது. இதனால் 35 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன.

4. அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு பகுதியையோ அல்லது வட்டத்தையோ அல்லது மாவட்டத்தையோ 'வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி' என்று அறிவிப்பு ஏதும் செய்யாமலேயே ஆங்காங்கு அனைத்து வறட்சி நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டது.

5. குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கும்பொருட்டு மாநிலத்தில் மொத்தம் 6,550 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ரூபாய் 1,550 இலட்சங்கள் அனுமதியளித்தது. இது தவிர, பல்வேறு இதர குடிநீர் திட்டப் பணிகளுக்காக அரசு ரூ. 1,962.60 இலட்சங்களை அனுமதியளித்தது. மேலும் ஏனைய பிற பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட அட்டவணையில் காணுமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

வரிசை எண்ணும், திட்டங்களின் பெயர்களும். (1)	நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்.)
குடிநீர் திட்டப் பணிகள்—	
1 ஆழ்துளைக் கிணறு	1,550.00
2 குடிநீர் வழங்கும் திட்டம்	1,107.52
3 கூட்டுக் குடிநீர்த் திட்டம்	225.08
4 சென்னை பெருநகர்	525.00
5 மதுரை மாநகராட்சி	85.00
6 கோவை மாநகராட்சி	15.00
7 கொடைக்கானல் நகரியம்	5.00

(1)	(2)
ஏனைய பிற பணித் திட்டங்கள்—	
8 வேலைவாய்ப்புத் திட்டங்கள்	500.00
9 வேளாண்மை இடுபொருள் மான்யம் ..	450.00
10 கூடுதல் சத்துணவுத் திட்டப் பணிகள் ..	36.00
11 பொது சுகாதாரத் திட்டப் பணிகள் ..	10.00
12 கால்நடைத் தீவனங்கள்	25.00
மொத்தம் ..	4,533.60

6. தடைபடாத குடிநீர் வழங்குவதற்காக ஜெனரேட்டர்கள் (மின் உற்பத்திப் பொறி) வாங்குவதற்கு நகராட்சிகளுக்கு ரூ. 95 இலட்சங்களை அரசு அனுமதியளித்தது. மேலும் சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு நீர்வரத்துள்ள கால்வாய்களை ஆழப்படுத்துவதற்கு ரூ. 1.50 இலட்சங்களை அரசு அனுமதியளித்து பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

7. வறட்சி நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து மாவட்ட அலுவலர்களை வழி நடத்தி அப்பணிகளை செவ்வனே செயல்படுத்தும் குறிக்கோளுடன் ஒன்பது (9) சிறப்பு வட்டார ஆணையர்களை அரசு நியமித்தது. ஒவ்வொரு வட்டார ஆணையரும் இரண்டு (2) முதல் மூன்று (3) மாவட்டங்களுக்கு பொறுப்பானவர்களாக நியமிக்கப்பட்டனர். 1989 ஆம் ஆண்டில் நவம்பர், டிசம்பர் மாதங்களிலும் மற்றும் இவ்வாண்டு ஜனவரி மாதத்திலும் பெய்த வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக குடிநீர் பிரச்சினை ஓரளவு சீரடைந்துள்ளது.

20. தீ விபத்து:

அநேகமாக கிராமப் புறங்களிலுள்ள வீடுகள் மண் சுவர்களின் மேல் மூங்கில் வைத்து தென்னங்கீற்றுகளாலும், ஓலைகளாலும் மற்றும் வைக்கோல் போன்றவைகளைக் கொண்டு வேயப்பட்டவைகள். சென்னை நகரத்திலும் இவ்வித குடிசைகள் உள்ள பகுதிகள் அதிகம் உள்ளன. ஆகையால், ஆண்டு முழுவதும் தீ விபத்துக்கள் நிகழ்கின்றன. ஆனால் கோடைக் காலத்தில் தான் அடிக்கடி தீ விபத்துக்கள் மற்றக் காலங்களை விட அதிகமாக நிகழ்கின்றன. தீ விபத்து ஏற்பட்டதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி வழங்குவதற்காக, முழுமையாகச்

1990 ஏப்ரல் 19]

சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 400-ம் பகுதி/சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ. 200-ம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இது தவிர தீ விபத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் (72 மணி நேரம் மற்றும் அதற்குப் பின்பும் மின் இணைப்பு பெறக்கூடிய வாய்ப்பு இல்லாவிடில்) மற்றும் ஒரு வேட்டி அல்லது ஒரு லுங்கி அத்துடன் ஒரு புடவையும் வழங்கப்படுகிறது. தீ விபத்து மற்றும் வெள்ளம் ஆகியவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறுவதற்கு ரூ. 400 மாத வருமானம் உள்ளவர்களே தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டார்கள். அவை 10-4-1989 முதல் நீக்கப்பட்டு, வருமான வரம்பின்றி நிவாரணம் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தீ விபத்தால் மரணமடைந்தவர் குடும்பத் தலைவராகவும், குடும்பத்தின் பொருளீட்டுபவராகவும் இருந்திருப்பினும், இருந்திராவிடினும், அவரது குடும்பத்திற்கு ரூ. 2,000 வழங்கப்படுகிறது. மரணமடைந்தவர் குழந்தையாக இருந்தாலும் இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர் மரணமடைந்திருப்பின் மரணமடைந்தவரின் எண்ணிக்கைக்கேற்ப இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. அரசு, எல்லா மாவட்ட ஆட்சியருக்கும் கருவூல விதி எண் 27-ன் கீழ் மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு இந்நிதியுதவி வழங்க அதிகாரம் வழங்கியுள்ளது.

3. இத்துடன் தீ விபத்தில் குடிசைகளையும், உடமைகளையும் இழக்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஊரக கைவினைஞர்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தினர் ஆகியோர்களின் ஆண்டு வருமானம் அனைத்து வகைகளிலும் ரூ. 4,800-க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு குடிசை காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இத் திட்டம் 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் ஆகும் காப்பீட்டுக் கட்டணம் முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ளும். இத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 1,000-ம் மற்றும் அதில் உள்ள உடமைகள் சேதமடைந்தால் தலா ரூ. 500ம் காப்பீட்டுக் கழகம் வழங்கி வருகிறது. தீ விபத்தால் குடிசைகளும் மற்றும் உடமைகளும் பாதிக்கப்படும் பொழுது மாநில அரசால் வழங்கப்பட்டு வரும் மொத்த நிவாரணத் தொகை மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையும், ரூ. 1,500-க்குள் அடங்க வேண்டும்.

5. மாநில அரசானது இத்திட்டம் செயல்பட வேண்டி முழு மூச்சுடன் செயற்பட்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 19

ஒருங்கிணைக்கப்பட்ட விபத்து நிவாரணத் திட்டம் :

சலவைத் தொழிலாளி, காலணித் தொழிலாளி, தச்சர்கள் மற்றும் பல பிரிவினர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது இறந்தாலோ அல்லது காயமுற்றாலோ அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட விபத்து நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் வருவாய்த்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி இதனால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு இறப்பு ஏற்பட்டால் ரூ. 10,000-மும் கை, கால் மற்றும் உடலின் பாகங்கள் இழப்பு ஏற்பட்டால் இழப்பிற்கு ஏற்றபடி ரூ. 5,000 மற்றும் ரூ. 7,000 வரை விபத்து நிவாரணம் வழங்கப்படுகிறது.

திட்டத்தின் முன்னேற்றம் :

இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட நாளான 23-5-1989லிருந்து 31-1-1990 வரை 235 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 22,83,000 வழங்கப்பட்டுள்ளது.

குடும்பநல துயர்துடைப்பு நிவாரணத் திட்டம் :

பொருளீட்டும் குடும்பத் தலைவரின் இழப்பால் துயருரும் ஏழைக் குடும்பத்திற்கு நிவாரண நிதி வழங்குவதற்கு தமிழ்நாடு குடும்பநல துயர் துடைப்பு நிவாரணத் திட்டம் அமுல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபர் இறந்துவிட்டால் அவருடைய மொத்த வருட வருமானம் ரூ. 5,000-க்கு மேற்படாமல் இருக்குமானால் அவருடைய குடும்பத்திற்கு ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) துயர் துடைப்பு நிவாரணமாக வழங்கப்படும். இத் திட்டம் வருவாய்த் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம், செயல்படுத்தப்பட்ட நாளான 23-5-1989 லிருந்து 31-1-1990 வரை, 10,517 ஏழைக் குடும்பங்களுக்கு நிவாரணமாக ரூ. 2,10,34,000 வழங்கப்பட்டுள்ளது.

21. நில அளவை மற்றும் பதிவுருக்கள் :

நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, வேளாண்மைப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் தேவைக்கேற்ப முதல் நில அளவை, மறு நில அளவை மற்றும் துணை நில அளவை ஆகியவற்றை மேற்கொள்கிறது. விற்பனை மாற்றம், உரிமை வழி மாற்றம், அன்பளிப்பு, பரிமாற்றம், நீதிமன்ற உத்தரவு, பாகப் பிரிவினை முதலிய நிகழ்வுகள் மூலம் அன்றாடம் ஏற்பட்டு

1990 ஏப்ரல் 19]

வரும் மாற்றங்கள் மேற்கொண்டு நிரந்தர நில உடமை ஆவணங்களில் பிரதிபலிக்கும் வகையில் மாற்றங்கள் மேற்கொண்டு நாளது வரை பராமரிப்பதும் ஆய்வு செய்வதும், இத்துறையின் பொறுப்பாகும்.

2. இத்துறை அரசின் பிற துறைகளுக்கு நில அளவை குறித்து புல எல்லைகளின் விவரங்கள், வீளக்கிகள், நிலத்தின் உரிமம், தரம் மற்றும் வரை படங்கள் போன்ற அனைத்து உள்ளமைப்புக்களைத் தயாரித்து வழங்குவதுடன், பொதுமக்களுக்கும் நில உடமை குறித்து தொண்டு நோக்குடன் பணியாற்றுகிறது.

3. பொது நிர்வாகத்திலும், பொதுநல நோக்குடன் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் பலவித அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவைப்படும் விளக்கிகள் அடங்கிய படம், மாநில, மாவட்ட, வட்ட, சாலை நிலப்படங்களும் மற்றும் சுற்றுலா வழிகாட்டி நிலப்படங்களும் தொகுக்கப்பட்டு பல வண்ணங்களில் அச்சடிக்கப்படுகின்றன.

4. கீழ்க்கண்ட திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை முன்னேற்றத்தில் உள்ளன:—

(1) நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாது பிறவற்றிற்கு பயன்படுத்தப் பட்டுவரும் வேளாண்மை நிலங்களை அளவை செய்தல்.

(2) சென்னை பழைய நகரம் நீங்கலாக அனைத்து நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகளில் நகர அளவை மேற்கொள்ளல்.

(3) மலைக் கிராமங்களின் அளவை.

நத்தம் மற்றும் வேளாண்மைக்கல்லாத பிறவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் நிலங்களை அளவை செய்தல்.

5. மேற்கண்ட நிலங்கள் இதுவரை விரிவாக நில அளவை செய்யப்படவில்லை. இதன் காரணமாக நத்தம் பகுதிகளிலும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படாமல் பிற பயன்களுக்கு உபயோகப்படுத்தப்படும் விவசாய நிலங்களிலும் விரிவான நில அளவை செய்ய தீர்மானிக்கப்பட்டது. இந்த அளவையின்போது நத்தத்தில் உள்ள சாலை, தெரு, சந்துகள் ஆகியவற்றின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு நில அளவை செய்யப்படுகிறது. தங்கள் சொத்தின் மீதான உரிமையையும், பாத்தியத்தையும் நிலைநாட்ட பொது மக்களுக்கு நத்தம் நில அளவை பெரிதும் பயன்படுகிறது.

[1990 ஏப்ரல் 19

6. இத்திட்டத்தின்கீழ் சுமார், 14,000 ச.கி.மீ. பரப்பளவை 5 ஆண்டு காலத்திற்குள் அளவை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அரசு ஆணை 1971 வருவாய் (எஸ். எஸ். 2) நாள் 14-10-1988-ன்படி நத்தம் அல்லது கிராமக் குடியிருப்புக்களாக முன்னரே வகைப்படுத்தப்பட்ட தனியார் நில உடமைகள் மற்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தாமல் பிறவற்றிற்குப் பயன்படுத்தப்படும் விவசாய நிலங்களுக்கும் மனைவரி நிர்ணயம் செய்ய இந்த அளவையின் மூலம் சாத்தியமாகிறது. இத்திட்டத்தில் 31-12-1989 வரை 1523.59 ச.கி.மீ. பரப்பளவு அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

நகர அளவை :

7. சுமார் 1900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உள்ளடக்கி தமிழ்நாட்டில் 109 நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் உள்ளன, இவற்றில் 1200 ச.கி.மீ. பரப்பில் 76 நகராட்சிகள் 1901-1930 காலக்கட்டத்தில் நகர அளவை செய்யப்பட்டுள்ளன. சுமார் 700 ச.கி.மீ. பரப்பில் 33 நகராட்சிகளில் இதுவரை விரிவான நகர அளவை செய்ய எடுத்துக் கொள்ளப்படவில்லை. முன்னரே அளவை செய்யப்பட்ட நகராட்சிகளில் நகர அளவை அப்பொழுது இருந்த நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது, பிற்பாடு அனைத்து நகராட்சிகளிலும் விரிவாக்கப்பட்ட பகுதி மொத்த பரப்பில் 1/3 பகுதியாகவும், சுமார் 400 ச.கி.மீ. பரப்பளவையும் கொண்டதாக உள்ளது. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி போன்ற பெரு நகரங்கள் வேகமாக விரிவடைவதால் விவசாய நிலங்கள் குடியிருப்பு மனைகளாகவும் தொழிற்கூடங்களாகவும் உருமாறி வருகின்றன. எனவே, இந்நில உடமைகளின் எல்லைகள் வரையறை செய்ய விரிவான நகர அளவை மேற்கொள்வது அவசியமாகிறது, இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள 109 நகராட்சிகளிலும், 3 மாநகராட்சிகளிலும் மூல துணை நகர அளவை-ஆவணங்கள் மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்படுகிறது, 31-12-1989 முடிய இத்திட்டத்தின் கீழ் 185-45 ச.கி.மீ. பரப்பில் நில அளவைப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மலைக்கிராம அளவை:

8. மலைக் கிராமப் பகுதிகளில் 1899-1910ஆம் வருட காலக் கட்டத்தில் அப்போதைய வழக்கில் இந்த நடைமுறைகளை யொட்டி நில அளவை செய்யப்பட்டுள்ளது. இந்நில அளவை ஆவணங்கள் காலாவதியாகி, நடைமுறைக்கு ஒவ்வாதவையாகி விட்டன. அரசு தரிசு நிலங்கள் நில அளவை செய்யப்பட்டு, கிராம எல்லைக்குள் சேர்க்கப்படவில்லை. இத்தகைய தரிசு நிலங்கள் சுமார் 50 முதல் 80 வருட காலமாக பெரும்பாலும்

1990 ஏப்ரல் 19]

ஆதிவாசிகளால் சிவஜாமா முறையில் சாகுபடி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. இந்நிலங்கள் அளவை செய்யப்பட்டு, கிராம எல்லைக்குள் சேர்க்கப்படாததால், சிவஜாமா முறையில் இப்போது சாகுபடியை மேற்கொள்ளும் ஆதிவாசிகள் அடையாளங்காண இயலவில்லை. இந்நிலங்களின் மேல் மக்களுக்கு உள்ள உரிமைகள் உறுதியாக அங்கீகரிக்க முடியவில்லை. இதனால் பட்டா வழங்கவும் இயலவில்லை. தவறான ஆக்கிரமங்களைத் தடுக்க, கிராம எல்லை மற்றும் ஒதுக்கக் காடுகள் ஆகியவற்றில் எல்லைகள் வரையறுப்பது அவசரத் தேவையாகிறது. அதே நேரத்தில் ஒதுக்கக் காடுகள் என அறிவிப்பு செய்ய பிரேரேபிக்கப்படும் எல்லைக்குள் உள்ள அரசு தரிசு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கவோ அல்லது வனத்துறை புதிதாக தோட்டப்பயிர்களை நடவோ, பயன்படுத்தலாம். இந்த அம்சங்களை எல்லாம் மனத்தில் கொண்டுதான் இதை ஆதிவாசிகளின் நல்வாழ்வுத் திட்டமாக அரசு கருதி, வடாற்காடு திருச்சி, சேலம், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இப்பணியை மேற்கொள்ள ஆணை வழங்கியது. 31—12—90 வரை 436.59 ச.கீ.மீ. பரப்பில் அளவைப் பணி முடிக்கப் பட்டுள்ளது.

வருவாய் பதிவேடுகளும் பதிவுருகளும் பராமரித்தல் :

9. கிராம மட்டத்திலிருந்து, மாநில அளவை வரை எல்லைகள் அடையாளம் காண்பதற்கு உன்னிப்பாக பராமரிப்புப் பணி மிக அவசியமான ஒன்றாகும். பராமரிப்பு நில அளவை ஆவணங்களில் அன்றாட மாற்றங்கள் செய்து பதிவேடுகளை செவ்வனே பராமரிக்கும் பொருட்டு குறுவட்டம் மற்றும் வட்டங்களில் பணியாளர்களின் அமைப்பை கூடுதலாக நியமித்து பராமரிப்புப் பணியை வலுப்படுத்தியுள்ளது.

அச்சக வசதிகள் :

10. சென்னை நில அளவைப் பதிவுருக்கள் துறையுடன் இணைந்துள்ள நில அளவை மத்திய அலுவலகத்தில் வரைபடங்கள் அச்சிடுவதற்கான வசதிகள் உள்ளன. இத்துறையில் வரைபடங்கள் கருப்பு-வெள்ளையிலும் மற்றும் ஆறு வண்ணங்களிலும் அச்சிட்டப்படுகின்றன. மேலும், லித்தோ பணியையும் இத்துறையால் ஏற்க இயலும். நிழற்பட அச்சு மூலம் வரைபடம் தயாரித்து அச்சிட இத்துறை நவீன தொழிற்நுட்ப உத்திகளை உபயோகிக்கிறது. வரைபடங்கள் நகல் எடுப்பதற்கு நிழற்பட நகல் எடுக்கும் இயந்திரம் உபயோகிப்பது போன்ற வற்றின் மூலம் இத்துறை ஏற்கெனவே இயந்திரமயமாக்குதலை அறிமுகப்படுத்தியுள்ளது.

நில அளவைப் பயிற்சிப் பள்ளி:

11. இத்துறையின் சார்பில் தஞ்சை மாவட்டம் ஒரத்த நாட்டில் ஒரு நில அளவைப் பயிற்சி பள்ளி துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. வருவாய் மற்றும் பிற துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு இப்பள்ளியில் நில அளவை மற்றும் நிலவரித் திட்டப் பணிகள் தொடர்பான பயிற்சி அளிக்கப் படுகிறது. இத்துடன், இந்திய ஆட்சிப் பணியாளர்கள் (ஐ.ஏ.எஸ்.) மற்றும் துணை மாவட்ட ஆட்சியர்களுக்கும் இப் பள்ளியில் நில அளவைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பள்ளி தற்சமயம் ஒரத்த நாடு கல்லூரி கல்வி வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கென சொந்தத் தில் தங்கும் வசதியுடன் கூடிய புதிய கட்டிடத்தைக் கட்டித் தருவதன் அவசியத்தை உணர்ந்து, அதற்காக இக்கல்லூரி வளாகத்தில் உள்ள காலியிடத்தில் ரூபாய் 46.55 இலட்சம் மதிப் பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்டு அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற் குரிய காலியிடம், ஒரத்தநாடு நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கு கால்கோள் அமைக்கப்பட்டுள்ளது.

நிதி உதவி :

12. நிலச் சீர்திருத்தம் மற்றும் விவசாயப் பொருளாதார வளர்ச்சியின்கீழ் திட்டங்கள் தீட்ட நில உடமைப் பதிவை மேம்படுத்துதல் ஒரு அடிப்படை தேவையாகும். இதனை கருத்திற்கொண்டு, 1984-ஆம் வருடம் ஜனவரி மாதம் 6 முதல் 8 வரை ஐதராபாத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டம் தேவையான பகுதிக்கும் நில உடமையை மேம்படுத்துதலுக்கும், மைய அரசு 100 சதவீத நிதி உதவி செய்ய வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. இம்மாநிலம் தற்சமயம் கடுமையான நிதி பற்றாக்குறைக்கிடை யிலும், பல திட்டங்களைப் பொது நல நோக்கில் மக்களுக்காகச் செயல்படுத்தி வருகிறது.

வருவாய் நிருவாகம் பலப்படுத்தவும் மற்றும் நிலஉடமை பதிவுருக்களை மேம்படுத்துவதற்கும் மைய அரசு நிதி உதவித் திட்டத்தின் கீழ், 1990ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் இந்திய அரசிடமிருந்து ரூபாய் 100 இலட்சம் பெறப்பட்டுள்ளது. இவ் வரசும் ரூபாய் 100 இலட்சம் மேற்படி திட்டத்திற்காக அனுமதி வழங்கியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் நிலப்பதிவேடு, ஆவணங்களை மின் கணிப்பொறியில் பதிவு செய்வதற்காக ஒரு முன்மாதிரி திட்டத் திற்கென மைய அரசு 20—3—1990ஆம் நாளன்று ரூபாய் 25 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சத்தை) வழங்கியுள்ளது.

1990 ஏப்ரல் 19]

வணிகவரி மற்றும் அறநிலையத் துறை.

கோரிக்கை எண். 5.

முத்திரைத்தாள் நிர்வாகம்.

1. பொது :

சொத்து விற்பனை மாற்றம், அடைமானம், நன்கொடை உடைமை உரிமை நிலவர ஏற்பாடு, முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) வகை செய்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு பதிவுத் துறைத்தலைவர் 1—12—1980-லிருந்து வருவாய்க் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத்தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாயை நிர்வகித்து வருகிறார்.

2. முத்திரைத்தாள்களின் தேவையைக் கணித்தலும் முத்திரைத்தாள்களை வழங்குதலும் :

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத்தாள்களான நீதித்துறையைச் சார்ந்த முத்திரைத்தாள்கள், நீதித் துறையைச் சாரா முத்திரைத்தாள்களின் தேவையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர் முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராகச் செயல்படுகிறார். முத்திரைத்தாள்களின் ஆண்டு மற்றும் காலாண்டுக்கான தேவைப் பட்டியலை மாவட்டக் கருவூல அதிகாரிகளும், முத்திரைத்தாள் உதவிக் கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ் வேறு கருவூலங்களில் முத்திரைத்தாள்களின் இருப்பு நிலவரப் படியும், பொதுமக்களுக்குத் தேவைப்படும் அனைத்துவிதமான மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும் நோக்குடனும் பொதுமக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது, அத் தேவையை நிறைவு செய்யும் வகையிலும் சென்னை, முத்திரைத் தாள்கள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத்தாள்கள் தேவைப்பட்டியலைத் தயாரிக்கிறார். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள் அவசரமாகத் தேவைப்படும்போதும், பற்றாக்குறை ஏற்படும்போதும், அம்முத்திரைத்தாள்களை இருப்பு வைத்துள்ள மாவட்டக் கருவூலத்திலிருந்து இருப்பு இல்லாத மாவட்ட கருவூலத்திற்குத் தேவையான முத்திரைத்தாள்களை மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

3. உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் :

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் மூலமும், கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் பொதுமக்களுக்கு முத்திரைத்தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 1,883 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். முத்திரைத்தாள் விதிகளில் குறிப்பிட்டவாறு உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு தரகுத்தொகை வழங்கப்படுகிறது. இவர்களின் பணியை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத்துறை உயர் அதிகாரிகளும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர். மேலும், செயற்கையாக முத்திரைத்தாள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அவற்றைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யும் நோக்குடன் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் முத்திரைத்தாள்களை ஒட்டு மொத்தமாக விற்பனை செய்வதைத் தவிர்க்கவேண்டி பொதுவான தன்மையிலான பத்திரங்களைப் பொறுத்தமட்டில் முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக, ரொக்கம் பெற சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாநிலம் முழுவதுமுள்ள அனைத்துப் பதிவு அலுவலங்களிலும் முத்திரைத்தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. இந்நடவடிக்கை மூலம் முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலம் முத்திரைத்தாள் கிடைக்காததால் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் குறைக்கப்படுவதுடன் பொதுமக்கள் பிறரால் சுரண்டப்படுவதும் தவிர்க்கப்படுகிறது. பொதுமக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரைத்தாள்களை ஒட்ட உதவும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கின்றன.

4. வருவாய் :

முத்திரைத்தாள் வருவாய்.

வருடம்.	பத்திரப் பதிவு அதிகாரிகள் மூலம்.	முத்திரைத் தாள்கள் கண்காணிப் பாளர் மூலம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	(ரூபாய் கோடியில்.)		
1987-88 ..	164.11	16.65	180.76
1988-89 ..	199.46	20.92	220.38
1989-90 ..	261.01	17.15	278.16
	(31-3-1990 வரை)		

1990 ஏப்ரல் 19]

5. வழிகாட்டி மதிப்பு மறு நிர்ணயம் :

அசையும் சொத்துக்கள் அல்லது அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் பேரில் அதாவது சொத்துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், விடுதலை ஆவணம், உடைமை, உரிமை நிலவர ஏற்பாடு, நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடைமானம் ஆகியவை போன்ற ஆவணங்களுக்கு முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது. சொத்து விற்பனை மாற்றம், உடைமை உரிமை நிலவர ஏற்பாடு குறித்த நடவடிக்கையில், சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்குடன், பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு அவரவர் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்பைக் குறிப்பிடும் வழிகாட்டிப் பதிவேடு கொடுக்கப்பட்டுள்ளது.

வழிகாட்டிப் பதிவேடுகளின் மறு நிர்ணயம் 1986-87-ல் நடைபெற்று 1—3—1987 முதல் நடைமுறைக்குக்கொண்டு வரப்பட்டது. காலமுறைக்கேற்ப ஒவ்வோராண்டும் சந்தை மதிப்புகளின் உண்மை நிலை திருத்தியமைக்கப்படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் கீழ் ஒரு வழிகாட்டிக்குழு இயங்கி வருகிறது. அக்குழுவினால் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பு 1—4—1990-லிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூபாய் 16 கோடி அதிக வருமானம் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. சொத்துக்களைக் குறைவாக மதிப்பிடும் பழக்கத்தை அறவே தவிர்க்கும் பொருட்டு தேவைப்படும் போதெல்லாம் வழிகாட்டி மதிப்பு பதிவேட்டை முறையாகப் பார்வையிடுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்துறையில் நெருக்கமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள், முத்திரைத் தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், 1968-69-ல் ரூபாய் 40 கோடியாக இருந்தது. 1988-89-ல் ரூபாய் 199 கோடியாக அதிகரித்துள்ளது. 1989-90ஆம் நிதியாண்டில் ரூபாய் 250 கோடி குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், 31—3—1990 முடிய கிடைத்த வருவாய் ரூபாய் 261.01 கோடியாகும்.

[1990 ஏப்ரல் 19

6. இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் 47-ஏ பிரிவின்கீழ் வரும் இனங்கள் :

பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்தின் சரியான சந்தை மதிப்பைத் குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் உண்மையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள, பத்திரப் பதிவு அதிகாரிகள் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள வழிகாட்டிப் பதிவேடுகளை வைத்து சரிபார்க்கின் றனர். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழி காட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்தால் பத்திரம் பதிய வருபவர் அத்தொகையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47-ஏ இன் கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை தீர்மானிப்பதற்கு பத்திரப்பதிவு அதிகாரி அந்தப் பத்திரத்தை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைப்பார். செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை மாவட்ட ஆட்சியர் தீர்மானிக்கிறார். அவ்வாறு சட்டப் பிரிவு 47-ஏ இன் கீழ் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம். இனிமேல் மாவட்ட ஆட்சியர் (முத்திரைத்தாள்கள்) உத்தரவினால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் சாரா (Non-judicial) மேல்முறையீடு அதிகாரி, அதாவது நில நிர்வாக ஆணையாளரிடம் மேல்முறையீடு செய்து கொள்ள முத்திரைச் சட்டத்தில் வழிவகை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் எல்லையில் அமைந்துள்ள சொத்துக்கள் பதிவுச் சட்டத்தின் 28 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ள படி அண்டை மாநிலங்களில் பதிவு செய்யப்படும்போது முத் திரைத் தீர்வை குறைவாக வசூலிக்கப்பட்டுவிடுகிற இனங்களில் அவ்வாறு விடுபட்ட முத்திரைத் தீர்வையை வசூலிப்பதற்கு இம்மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் முத்திரைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது. சட்டப்பிரிவு 47-ஏஇன் கீழ்க் கொண்டுவரப்பட்ட வழக்குகள் அதிகமாக இருந்ததால், பதிவுத் துறையிலும், வருவாய்த் துறையிலும், 1989 ஆம் ஆண்டில் சிறப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 56,421 வழக்குகள் முடித்துள்ளார்கள். மேலும் ரூபாய் 7.87 கோடி வசூலித்துள்ளார்கள்.

7. கட்டிடங்களைப் பார்வையிடுதல் :

கட்டிடங்களை விற்பனை செய்தல், நன்கொடையாகக் கொடுத்தல், பரிவர்த்தனை செய்தல் ஆகியவற்றைப் பொருத்த மட்டில் அக்கட்டிடத்தில் முழு விவரங்களையும் ஒரு படிவத் தில் குறிப்பிட்டு பத்திரத்துடன் இணைத்து சமர்ப்பிக்க

1990 ஏப்ரல் 19]

வேண்டும். ஆனால், பத்திரம் பதிய வரும் பொதுமக்கள் பொதுவாக உண்மையான விவரங்களை ஆவணத்தில் கொடுப்பதில்லை. எனவே, உண்மையான மதிப்பை மறைத்து குறைவாக மதிப்புக்காட்டப்பட்டுள்ள இனங்களைக் கண்டுபிடிக்க அரசு கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் 4 மாவட்டப் பதிவாளர்களையும், இருபத்தாறு தணிக்கை மாவட்டப் பதிவாளர்களையும், இரு உதவி செயற் பொறியாளர்களையும் கொண்ட ஒரு கட்டிட புலனாய்வுக் குழுவை ஏற்படுத்தி உள்ளது. பதிவான கட்டிட ஆவணங்களில் ரூபாய் 10,000-க்கு மேலான மதிப்புள்ள சொத்தைக் 'கள ஆய்வு' செய்து உண்மை நிலைகள் மறைக்கப்பட்டிருப்பின் உரிய நடவடிக்கை எடுத்து, அரசுக்கு சேரவேண்டிய வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் இந்த நிதியாண்டில் 28,665 ஆவணங்களில் கண்ட கட்டிடங்களைக் கள ஆய்வு செய்து ரூபாய் 4.75 கோடி வருவாய் மறைப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் இதுகாறும் ரூபாய் 1.29 கோடி வசூல் செய்யப்பட்டு உள்ளது.

8. முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி :

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை, உரிமையுடன் கூடிய அடைமானம் காலவரையற்ற நிபந்தனைகளுடன் கூடிய குத்தகை தொடர்பான ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத்தாள் தீர்வையுடன் 5 சதவீதம் மேல்வரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் மேல்வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீத தொகையை வசூல் கட்டணமாக இத்துறை எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ள 90 சதவிகித தொகையை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதேபோல நகர பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மேல்வரி வசூலில் 3 சதவிகித இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகித மேல்வரியை சம்பந்தப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப் படுகிறது.

9. 1988–89 ஆம் ஆண்டிலும், 1989–90 ஆம் ஆண்டிலும்
(டிசம்பர் 1989 வரை)

முத்திரைத்தாள்களின் வரவு–செலவு விவரங்கள் :

தணக்குத் தலைப்பு	1988-89. (1-4-88—31-3-89)	1989-90. (1-4-89—31-12-89)
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
1 நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள்.	131,79,15,187.50	117,46,43,650.40

[1990 ஏப்ரல் 19

கணக்குத் தலைப்பு	1988-89. (1-4-88—31-3-89)	1989-90. (1-4-89—31-12-89)
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
2 நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்கள்.	13,52,99,998.50	11,43,10,694.55
3 உண்டியல் முத்திரைத் தாள்கள்	35,06,458.50	74,09,144.00
4 ஓட்டு முத்திரை வில்லைகள்.	8,20,49,564.25	4,80,06,971.30
5 பலவகை வரவு	36,12,73,660.35	57,77,21,730.57
பெரு மொத்த வரவுகள்.	190,00,44,869.10	192,20,92,190.82
கழிப்பு—திருப்பிச் செலுத்தியவை:		
1 உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித்துறை சாராதவை.	46,93,33,121.55	51,63,47,202.90
2 நீதித்துறை சார்ந்தவை.	48,70,169.67	83,98,801.95
மொத்தம்	47,42,03,291.22	52,47,46,004.85

1990 ஏப்ரல் 19]

(1)	(2)	(3)
கட்டணங்கள் :		
1 முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி	67,28,735.40	59,17,195.02
2 பணியாளர் செலவு.	21,10,194.55	31,55,959.35
3 நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தத் தக்க கட்டணம்.	91,59,852.00	21,96,316.00
மொத்த செலவுகள்	1,79,98,781.95	1,12,69,470.37
மொத்த வரவுகள்	1,90.00,44,869.10	1,92,20,92,190.82
மொத்த செலவுகள் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகையும்.	49,22,02,073.17	53,60,15,475.22
நிகர வரவுகள் ..	1,40,78,42,795.93	1,38,60,76,715.60

மானியக் கோரிக்கை எண். 6.

பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

1864ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பலதரப்பட்ட சேவைகளை ஆற்றும் பத்திரப் பதிவுத் துறை தனது 125 ஆண்டு கால வரலாற்றை

[1990 ஏப்ரல் 19

இவ்வாண்டில் நிறைவு செய்ய உள்ளது. இத்துறை 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தையும் (மத்திய சட்டம் 16/1908) மற்றும் கீழே பத்தி 3-ல் குறிப்பிட்ட சட்டங்களையும் செயற்படுத்தி வருகிறது. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பதிவு செய்தலும் அவை சம்பந்தப்பட்ட பதிவு ஆவணங்களைப் பாதுகாத்து பேணலும் இத்துறையின் முக்கியமான பணியாகும்.

2. நிருவாக அமைப்பு :

பத்திரப் பதிவுத் துறைத் தலைவராக இந்திய ஆட்சிப் பணித் தரத்தில் உள்ள அலுவலர் ஒருவர் உள்ளார். பிறப்பு, இறப்பு, திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளராகவும், 1982ஆம் ஆண்டு மத்திய சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 40/1982) சீட்டு நிதிகள் பதிவாளராகவும் இவர் இருக்கிறார்.

இவருக்கு உதவியாகப் பின்வரும் அதிகாரிகள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர்.

(i) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி).

(ii) கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு).

(iii) துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் சட்ட அலுவலர்.

(iv) துணைப் பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில் கூடுதல் சீட்டுப் பதிவாளர்.

(v) பத்திரப் பதிவு அலுவலகங்களின் நேர்முக உதவியாளர் (உதவி பதிவுத் துறைத் தலைவர் பதவித் தரத்தில்)

(vi) மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் பத்திரப் பதிவுத் துறைத் தலைவருக்கு நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்).

(vii) கணக்கு அலுவலர்.

1990 ஏப்ரல் 19]

(viii) காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமை யின் கீழ் இயங்கும் விழிப்புப் பணிக்குழு.

வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களைத் தலைமை இடங்களாகக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பத்திரப் பதிவுத்துறை துணைத் தலைவர் ஒருவரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் இரு உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர். மண்டலம் முழுவதையும் நிருவகித்தல், அனைத்து அலுவலகங்களையும் ஆய்வு செய்தல், விசாரணைகள் நடத்துதல் ஆகியவை துணைப் பதிவுத் துறைத் தலைவரின் முக்கியமான கடமைகளாகும். அவருடைய விசாரணை அதிகாரத்திற்குள் வருகிற பத்திரப் பதிவுத்துறை உதவி பதிவுத்துறைத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள், சார்பதிவாளர்கள் ஆகியோரின் அலுவலகங்களின் பணியை மேற்பார்வையிடும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவருடைய மண்டல வருவாய்க்கு அவர் பொறுப்பாவார்.

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் 11 உதவி பதிவுத் துறைத் தலைவர்கள், பணி புரிந்து வருகின்றனர். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், கட்டிடங்களின் மதிப்பீட்டை சரிபார்ப் பதற்காக கட்டிடங்களைக் கள ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பான விசாரணைகள் செய்தல் ஆகியவை பத்திரப் பதிவு அலுவலக உதவி பதிவுத்துறைத் தலைவர்களின் முக்கிய மான கடமையாகும். அவர்கள் சங்கங்களையும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர். பொதுவாக அவர்கள் அந்தந்த மண்டலங்களில் பத்திரப் பதிவுத் துறை துணைத் தலைவரின் அன்றாட நிருவாக அலுவல்களில் அவருக்கு உதவி புரிகின்றனர். இம்மாநிலம் 46 பத்திரப் பதிவு மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிகளின் இணைப் பதிவாளராகவும், திருமணங்கள் , கூட்டு வணிக நிறுவனம் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கிறார். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் மேல்முறையீடுகளை விசாரித்தல், பத்திரங் களின் தன்மை தொடர்பாக சார்பதிவாளர்கள் எழுப்பும் ஐயங் களுக்கு விளக்கமளித்தல், புகார்கள் ஏதேனும் வரப் பெற்றால்

அவற்றை விசாரித்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள் அடங்கிய சொத்துக்களை கள ஆய்வு செய்து சரியான மதிப்பை நிர்ணயித்தல் அவருடைய முக்கியமான பணிகளாகும்.

நிர்வாகத்தில் எழுச்சியூட்டும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகர்களில் உள்ள மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்) பணியிடங்கள் உதவி பதிவுத் துறைத் தலைவர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

மாநிலக் கணக்குத்துறைத் தலைவர் தெரிவித்த தணிக்கை மறுப்புரைகளுக்குப் பதிலளித்துத் தீர்வு காணும் பொருட்டு, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) வின் கீழ்பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும் 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் சார்பதிவாளர்கள் பதிவு செய்த ஆவணங்களை முழுமையாக சரிபார்க்கின்றனர்.

மாநிலம் முழுவதிலும் 574 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றையும் சார்பதிவாளர் ஒருவர் நிருவகித்து வருகிறார். அவர் எல்லா வகையான ஆவணங்களையும் பதிவு செய்கிறார். வில்லங்கச் சான்றிதழ்கள் வழங்குகிறார். ஆவணங்களின் நகல்களுக்குச் சான்றளிக்கிறார். திருமணங்களையும், சீட்டுகளையும் பதிவு செய்கிறார். பதிவுத் துறையின் பணி பொது மக்களுக்கு எளிதில் கிட்டும் வகையிலும் இத்துறையை திருத்தியமைக்கும் நிட்டத்தை நிறை வேற்றும் வகையிலும் ஒவ்வோராண்டும் சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற பெருநகர்களைப் பொருத்த வரையில் பதிவுக்கு வரும் ஆவணங்கள் சிக்கலானதாகவும் அதிகமான மதிப்புள்ளதாக இருப்பதாலும், அந்த பெரு நகர்களிலுள்ள சார்பதிவாளர்கள் மாவட்டப் பதிவாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

சொத்துக்களில் உள்ள உண்மைகளை மறைத்து, ஆவணங்களின் மதிப்பைக் குறைப்பதைக் கண்டறிந்து கட்டிடங்களின் அங்காடி மதிப்பைக் கணக்கிடுவதில் இத்துறையின் அதிகாரிகளுக்கு இரு உதவி செயற் பொறியாளர்கள் உதவுகின்றனர். அத்துடன் கூடுதல் பதிவுத் துறை தலைவரின் கீழ் ''புலனாய்வுப் பிரிவு'' ஒன்று ஏற்படுத்தப்பட்டு, 4 மாவட்ட பதிவாளர்கள்

1990 ஏப்ரல் 19]

புலனாய்வு மற்றும் 26 தணிக்கை மாவட்டப் பதிவாளர்கள் உதவியுடன் 10,000-க்கு அதிக மதிப்புள்ள கட்டிடம் சம்பந்தப் பட்ட ஆவணங்களைக் கள ஆய்வு செய்து மதிப்புக் குறைவு குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3. இத்துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள் :

(1) 1908 ஆம் ஆண்டு இந்திய பத்திரப் பதிவுச் சட்டம்.

(2) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம்.

(3) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982).

(4) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்;

(5) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.

(6) 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு திருமணங்கள் சட்டம்.

(7) (அ) 1936 ஆம் ஆண்டு பார்சி இனத்தவர் திருமணங்கள் மற்றும் விவாகரத்து சட்டம்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

(இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்.

(ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்.

(உ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்.

(ஊ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.

(8) 1972 ஆம் ஆண்டு வணிகஞ்சாரா நிறுவனங்கள் சட்டம்.

[1990 ஏப்ரல் 19

4. வருவாய் :

ஆவணங்கள் மீது விதிக்கப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணங்கள், சீட்டுகள் சங்கங்கள், கூட்டு வணிக நிலையங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்பட்ட கட்டணங்கள் ஆகியவை இத் துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். ஆவணத்தில் சொல்லியபடி கைமாறாகப் பெறும் தொகையின் அடிப் படையில் அல்லாமல், அந்த சொத்தின் அங்காடி மதிப்பின் பேரில் அந்த ஆவணத்திற்கு முத்திரைக் கட்டணம் விதிக்கப் படுகிறது.

5. ஆவண எழுத்தர்களும், நகல் எழுத்தர்களும் :

நகல் எழுத்தர்கள் உரிம விதிகள் 1971-ல் இயற்றப்பட்டன. ஆவண எழுத்தர்களுக்கு உரிமங்கள் வழங்குவது தொடர்பான விதிகள் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ஆம் தேதியி லிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்டன. 31—12—1989-ம் நாள் நிலவரப்படி, நகல் எழுத்தர், ஆவண எழுத்தர் உரிமங் களின் எண்ணிக்கை வருமாறு :

	ஆவண எழுத்தர்கள்.	நகல் எழுத்தர்கள்.
(1)	(2)	(3)
1. மாநில உரிமம் வைத்திருப்பவர்கள்	1,605	520
2. மாவட்ட உரிமங்கள்	6,404	720
3. துணை மாவட்ட உரிமங்கள்	3,493	7,148
மொத்தம் ..	11,502	8,388

1990 ஏப்ரல் 19]

ஆவண நகல்களைத் தட்டச்சு செய்வதற்கு இதுவரை உரிமம் வழங்கப்படவில்லை. ஆவண நகல்கள் தயாரிப்பில் தரத்தை உயர்த்த தட்டச்சர்களுக்கும் உரிமம் வழங்க அரசு முடிவு எடுத்து அதன்படி 907 உரிமங்கள் இதுவரை வழங்கப் பட்டுள்ளன.

6. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975) :

1908 ஆம் ஆண்டு இந்திய பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பதிவுத் துறைத் தலைவர், அனைத்து மாவட்டப் பதிவாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின்படி தத்தம் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிக்கு பதிவாளர்களாவர். பதிவுத் துறைத் தலைவர், பதிவாளர்களை மேற்பார்வை செய்யும் உரிமைப் பெற்றுள்ளார். பத்திரப் பதிவுத் துறைத் தலைவரின் அனுமதி பெற்ற பிறகே இச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர இயலும்.

2. இச்சட்டத்தின் 3-ஆம் பிரிவில் கூறப்பட்ட கல்வி, இலக்கியம், அறிவியல் போன்ற நோக்கங்களுக்காக எழுவர் சேர்ந்து ஒரு சங்கத்தை அமைக்கலாம். ஆண்டு வரவு–செலவு 10,000 ரூபாய்க்கு மேல் அல்லது 20 உறுப்பினர்களுக்குமேல் உள்ள சங்கங்கள், அவை அமைக்கப்பட்ட நாளிலிருந்து 3 திங்களுக்குள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். மதம், உடற்பயிற்சி அல்லது விளையாட்டுகள் முதலியவற்றை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட சங்கங்களும் அல்லது 10,000 ரூபாய்க்கு குறைவான வருமானம் உள்ள ஏனைய சங்கங்களும் அல்லது 20 உறுப்பினர்களுக்குக் குறைவாக உள்ள சங்கங்களும் விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம்.

3. ஆண்டு வரவு-செலவு 10,000 ரூபாய்க்கு மேல் உள்ள ஒவ்வொரு சங்கமும், அதன் கணக்குகளை, ஆண்டுதோறும் பட்டயக் கணக்கர்களைக் கொண்டு, தணிக்கை செய்யு

வேண்டும். சங்கத்தின் ஆண்டு வருமானம் 10,000 ரூபாய்க்கு குறைவாகவும், 2,500 ரூபாய்க்கு அதிகமாகவும் இருந்தால், அச்சங்கத்தின் கணக்குகளை, அச்சங்கத்தின் பட்டதாரி உறுப்பினர் ஒருவரைக் கொண்டு தணிக்கை செய்ய வேண்டும். அதன் ஆண்டு வருமானம் 2,500 ரூபாய்க்கு குறைவாக இருந்தால் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற சங்க உறுப்பினர் ஒருவரைக் கொண்டு அச்சங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளுக்கு நிதியாண்டு முடிவுற்ற நாளிலிருந்து 6 திங்களுக்குள் அச்சங்கத்தின் பொதுக் குழு ஒப்புதலளிக்க வேண்டும். அத்துடன் (i) வரவு–செலவு கணக்குகளின் அதிகாரப் பூர்வமான நகல் ஐந்தொகை கணக்கு, அறிக்கைகள், (ii) நிதியாண்டு முடிவுறுகையில் அச்சங்கத்திலுள்ள உறுப்பினர்களின் பட்டியல் (iii) நிதியாண்டில் சங்கம் சரிவர செயல்பட்டு வருவதற்கான உறுதிமொழி ஆகியவற்றைப் பொதுக் குழுவின் ஒப்புதல் பெற்ற இரண்டு திங்களுக்குள் ஆண்டுதோறும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். 31—12—1989-ன்படி செயல் முறையில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கை 45,674 ஆகும். 1989-ஆம் ஆண்டில் பதிவான சங்கங்களின் எண்ணிக்கை 4,184—ஆகும். அதில் எய்திய வருவாய் ரூ. 4,07,905 ஆகும்.

7. சீட்டு நிதி நிர்வாகம் :

1. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் : பதிவுத் துறைத் தலைவர், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டு நிதி நிறுவன இயக்குநராக அலுவல் சார்பான முறையில் செயல்படுகிறார். 31–12–1989 ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் நடந்தப்பட்டு வரும் சீட்டு நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 299 ஆகும். 31—12—1989 ஆம் நாள் நிலவரப்படி சீட்டு நிறுவனப் பதிவாளர் பிணைய வைப்புத் தொகையாக பெற்றுள்ள தொகையின் மதிப்பு ரூ. 129 இலட்சம் ஆகும். இச்சட்டம் 1982 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள்

1990 ஏப்ரல் 19]

சட்டத்தால் (மத்திய சட்டம் 40/1982) ரத்து செய்யப்பட்ட போதிலும் ஏற்கனவே செயல்பட்டு வரும் சீட்டு நிறுவனங்களை முறைப்படுத்த செயலில் இருந்து வருகிறது.

2. சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982) :— தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டத்திற்குப் பதிலாக, இச்சட்டம் 13—4—1984 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவரே சீட்டுப் பதிவாளராகவும் செயல்படுகிறார். கூடுதல் சீட்டுப் பதிவாளர் ஒருவரும், நேர்முக உதவியாளர் (சீட்டு) ஒருவரும் தலைமையிடத்தில் சீட்டுப் பதிவாளருக்கு உதவி புரிகின்றனர். 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் சீட்டுநிதிகள் சட்டத்தின் கீழ் இணைப் பதிவாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் மாவட்டங்களில் சீட்டுநிதிப் பணியை கவனிக்க 46 சார்பதிவாளர்கள் சீட்டு நிதி ஆய்வாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். சந்தாதாரர்களின் நலத்தினைப் பாதுகாக்க பல விதிகளை உள்ளடக்கியதாகும் சீட்டு நிதிகள் சட்டம். மத்தியச் சீட்டுநிதிகள் சட்டத்தின்படி வசூலித்து வைக்கப்பட்டுள்ள பிணைய வைப்பீடுகளின் மதிப்பு 31—12—1989 நிலவரப்படி ரூ. 35.56 கோடியாகும்.

தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட சீட்டு நிதி நிறுவனங்கள் 3,048 உள்ளன. அவை நடத்துகின்ற சீட்டுகளின் எண்ணிக்கை 16,199 ஆகும். சீட்டு நிறுவனங்களின் மீது வரும் புகார்களைக் கவனிக்கவும், பதிவுறா சீட்டுகள் நடைபெறுவதைக் கண்டுபிடித்து தண்டிக்கவும், சீட்டு சந்தாதாரர்களுக்கு உரிய தொகையை உரிய காலத்தில் வழங்கவும், ''சீட்டு விழிப்புக் குழு'', என்ற அமைப்பு 1—1—1990 முதல் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையின்கீழ் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதுவரை 40 பதிவுறா சீட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1990 ஏப்ரல் 19

மேற்படி சீட்டு நிதி நிறுவனம் அரசின் கொள்கை முடிவுப் படி 2—5—1989 தேதியிட்ட அரசு நிலையாணை எண் 305, (வணிகவரி மற்றும் அறநிலையத் துறை)-ன்படி கலைக்கப் பட்டது. பணியாளர்கள் யாவரும் படிப்படியாக வெளி யேற்றப்படுகிறார்கள். மிகக் குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு தற்போது இயங்கி வருகிறது. தற்போதைய சீட்டுப் பிரிவுகள் (Chit groups) முடியும் வரை அதாவது 1993 வரை மேற்படி சீட்டு நிதி நிறுவனம் செயல்பட்டு கொண்டிருக்கும். வெளியேற்றப்பட்ட பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள நியமனப் பிரிவின்படி (Placement Cell) அரசு பொது நிறுவனங்களிலோ அல்லது வாரியங்களிலோ வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என 6—9—1989 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 684 (வணிகவரி மற்றும் அறநிலையத் துறை)-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பொது :

ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மேற்படாத மதிப்புள்ள அசையாச் சொத்துக்கள் மாற்றம், அடமானம் முதலியவற்றை பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கு 'வருமான வரி பாக்கி இல்லை' என்ற சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்ற நடைமுறை 1988 ஆம் ஆண்டு நிதி சட்டத் தின் படி (மத்தியச் சட்டம் 26/1988) 1—4—1988-லிருந்து கைவிடப்பட்டுள்ளது.

வழக்கமான கட்டணத்தைப் போன்று இரு மடங்கு கட்டணம் செலுத்துவதன் பேரில் விண்ணப்பம் செய்து கொள்ளும் நாளன்றே சான்றளிக்கப்பெற்ற ஆவண நகல்கள் அல்லது வில்லங்கச் சான்றிதழ் அளிப்பதற்காக வழிவகைகள் செய்யப் பட்டுள்ளது. நாளொன்றுக்கு 5-க்கு மேற்படாத வகையில் அவசர விண்ணப்பக் கோரிக்கைகளைக் கவனிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதின் பேரில் பொதுமக்களின் அவசரத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1990 ஏப்ரல் 19]

பத்திரம் பதிவு விஷயங்களைப் பற்றி பொதுமக்கள் நன்கறியச் செய்யவும், இடைத் தரகர்களின் சுரண்டல்களிலிருந்து அவர்களைக் காக்கும் பொருட்டும், பத்திரம் பதிவு செய்யும் பொது மக்களுக்கு வழங்குவதற்காக பத்திரப் பதிவு நடை முறை கையேடுகள் அச்சிடப்பட்டுள்ளன.

பத்திரப் பதிவில் தயவு தாட்சண்யம் காட்டுவதைத் தவிர்க்கும் பொருட்டும், 'முந்தி வருகை முந்தி கவனிப்பு' என்ற கொள்கையை மக்கள் மனதில் இருத்தவும் அடையாள வில்லை வழங்கும் ஏற்பாடு வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 21—6—1988 நாளிட்ட 953 ஆம் எண் அரசாணையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முத்திரை வில்லைகள் விற்கும் முத்திரைத் தாள் விற்பனை யாளராக சார்பதிவாளர் செயல்பட்டு வருகிறார். ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும் பொருத்தமான முத்திரை வில்லைகளுக்குப் பதிலாக ரொக்கத்தை ஏற்றுக் கொள்ளவும் அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. முத்திரைத் தாள்கள் பெறுவதில் பொதுமக்களுக்குச் சிரமம் இல்லாமல் இருப்பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS